
அகில இலங்கை சைவன் நற்பணி மன்றம்
இந்துக்களாக மட்டுமே வாழ்வோம்

# 'சைவன்'

ஆண்டிதழ்

2004

தை



ஓம் நம சிவாய


# சைவன்

**சைவன் -2** **இதழ் - 2**

**தாரண வருடம் 10.12.2004 கார்த்திகை 25ம் நாள்**


## பஞ்ச புராணங்கள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

*திருநாவுக்கரசர்*

(பண்திருவிருத்தம்) (4ம் திருமுறை)

ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்றான்: இமையவாக்கு அன்பன், திரப்பாதிரிப்புலியூ ர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன் அடியோங்களுக்கே!

### திருவாசகம்

*(மாணிக்கவாசகர்)* (8ம் திருமுறை)

காலம் உண்டாகவே காதல் செய்து உய்மின்; கருதரிய
ஞாலம் உண்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்பிரான் தன் அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்துமுந்துமினே!

### திருவிசைப்பா

*பூந்துருத்திநம்பிகாடநம்பி*

(பண்-சாளரபாணி) (9ம் திருமுறை)

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதம் மாறா வெள்ளானை மேல் கொள்ள
முளையா மதிசூடி மூவாயிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம் நின் னாடரங்கே!

### திருப்பல்லாண்டு

*சேந்தனார்*

(பண்-பஞ்சமம்) (9ஆம் திருமுறை)

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்;
பெற்றதார் பெறுவாருலகில்?
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

### பெரிய புராணம்

*(சேக்கிழார் )* (12ம் திருமுறை)

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி,
பேதியா வேகமாகிப், பெண்ணுமாய் ஆணுமாகிப்,
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி!போற்றி!

ஓம்
நம சிவாய

# அருள் ஆசிச்செய்தி

அன்பு உத்தம இந்துக்களுக்கு

மானிடவாழ்வு குறுகியது.வீண் ஆடம்பரங்கள் நிலையற்றவை. பிறர் துன்பத்தில் பங்கு கொள்பவர்களே உண்மையான இந்துக்கள்.ஏனையோர் இறந்தவர்க்கே சமனானவர்கள்.மனிதவாழ்வு ஒழுக்கம் நிறைந்ததாக அமைய வேண்டுமெனில் இந்து மதக்கோட்பாட்டோடு மட்டுமே வாழவேண்டும். "எம்மதமும் சம்மதமும் என்ற சொற்றொடர் மனித வாழ்வை அழித்து விடும். ஒரு தாய் தன் மகன் சமுதாயத்தில் மிகவும் பேரும் புகழும் பெற்று வாழவே விரும்புவார். தாய் என்றபடியால் நானும் அதையே விரும்புகிறேன் அதேபோல்தான் இந்து மதம் மட்டுமே மனிதனை பண்பாளனாக வாழவைக்கிறது. "எப்படியும் வாழலாம் என்று வாழ்வது இழிவு வாழ்வு. இப்படித்தான் என்று வாழ்வது தான் இந்து வாழ்வு" இக்கூற்றிற்குரிய கருத்துக்கள் சைவனில் விரிவாக கூறப்பட்டுள்ளது. தனி ஒவ்வொருவரும் தன்னை உணர்ந்து வாழ வழிவகுப்பது இந்துமதமேயாகும். இந்து என்று கூறித்திரிவதில் பெருமையில்லை. இந்துவாக வாழ்வது எப்படி என்பதைத் தெரிந்து கொண்டு வாழ்வதே எமக்குப் பெருமை தரும். எம்மில் சிலர் நாம் ஏன் கோவிலுக்குப் போகிறோம் என்று தெரியாமலேயே வாழ்ந்து வருகிறார்கள். நாம் இந்துவாகவே வாழவேண்டுமெனில் இந்து மதத்தை ஓரளவேனும் அறிந்து வைத்திருக்க வேண்டும். மற்றவர் எப்படி வாழ்கிறார்கள் என்பதை அலசுவதை விட்டு விட்டு நாம் எப்படி வாழவேண்டும். என்பதைத் தெரிந்து கொண்டு வாழவேண்டும். "சைவன்" இந்துக்களாக வாழ விரும்பும் அனைவருக்கும் மிகவும் பயன்தரக் கூடியது. எனவே இந்துக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் "சைவனுக்கு"ஆதரவு தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்க சைவன்;! வளர்க இவரின் பணி!

**இந்துக்கள் என்றும் ஒற்றுமையுடன் வாழ்வோம்.**

நூலாசிரியரின் தாயார்
**இராசையா சின்னப்பிள்ளை**

ஓம்
நம சிவாய

# முன்னுரை

நல்லதை இன்றே செய்வோம் இல்லையேல் என்றுமே செய்யமுடியாது இது புதுமை மிகு கருத்து. மனிதனை உண்மையுடன் வாழ வைக்கும் கருத்து. சிந்தித்து உடனே செயற்படுத்தக்கூடிய கருத்து. நன்மை செய்யாவிடினும் தீமை புரிவதை தடுக்கும் கருத்து. துன்ப துயரங்களை தூர விரட்டும் கருத்து. துள்ளித்திரியும் வயதில் தொடங்கித் துடியாட்டம் அடங்கும் வயது வரைக்கும் துணிவுடன் செய்யச் சொல்லும் கருத்து. அன்பானவரே செய்யுங்கள்! நல்லதை மட்டுமே செய்யுங்கள்.!! நல்லதை நினைத்து விட்டால் நாலு பேருக்கு நன்மையைச் செய்யுங்கள்.நாளை என்பது பொய். இன்று என்பதே உண்மை. எனவே இன்றே நன்மையைச் செய்யுங்கள் ஒரு மனிதன் உயிருடன் வாழும் போது அவன் துன்பத்தில் பங்கு கொள்ளுங்கள் செத்தபிணத்திற்கு மாலை போடுவதும் விளம்பரம் தேடுவதும் நீ கீழ்குணம் உள்ளவன் என்பதையே தெளிவு படுத்தும்.உன்னால் முடிந்ததை உயிரோடு இருந்து துன்பப்படுபவனுக்குச்செய் மனிதப்பிறப்பே புனிதப்பிறப்பு.எனவே இப்பிறவியிலேயே நல்லதைச்செய்.அதையும் இன்றைக்கே செய். மனிதன் மனிதனாக வாழ மதம் முக்கிய இடத்தைவகிக்கிறது.ஒரு மனிதனுக்கு உடை,உணவு,உறையுள் எப்படி முக்கியமானதோ அதேபோல் மிகமுக்கியமானது மதமேயாகும்.அதிலும் மனிதனை நல்வழிப்படுத்தி இப்படிதான்வாழவேண்டும் என்றுவாழ வழிவகுப்பது இந்துமதமே.எப்படியும் வாழலாம் என்ற கருத்தையும் எம்மதமும் சம்மதமும் என்ற கருத்தையும் இந்துமதத்தினர் என்றுமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.வேற்று மதத்தைச்சேர்ந்தவர்களோடு நாம் பழகுவதில் தவறில்லை.ஆனால் அவர்களுடைய கருத்துக்கு செவிசாய்ப்பது மிகவும் முட்டாள்தனமானது.உலகின்பலபாகங்களில் இருந்தும் இந்துமதத்தின் கருத்துக்களைத்தாங்கிய பல நூல்கள் வெளிவருகிறது.ஆனால் இந்து மதத்திற்காக எவ்வித நூலும் வெளிவரவே இல்லை ஆதலால் தான "சைவன் " என்ற புத்தகத்தை இந்துமதத்திற்காக மட்டுமே வெளியிடுகின்றேன் உண்மையான இந்துக்கள் இக்கருத்தை ஏற்றுக் கொள்வார்கள் என நான் நம்புகிறேன்.சைவனின் எண்ணக்கரு மதமாற்றத்தைத் தடுப்பதும், பாடசாலை செல்லும் ஏழைச் சிறார்களுக்கு உதவும் நோக்கம் கொண்டே சைவனை வெளியிடுகிறேன். மூன்று மாதத்திற்கொரு முறை ஒரு பாடசாலையில் வெளியீட்டு வைபவம் நடைபெறும். அவ்வேளை

அப்பாடசாலையைச் சேர்ந்த படிக்கக்கூடிய, சைவப்பற்றுள்ள, வறுமைக்கோட்டுக்குள் வாழும் 10 பிள்ளைகளை பொறுப்பேற்று தொடர்ந்து படிப்பதற்கு உதவுவதே “சைவனின்” நோக்கமாகும்.சைவன் சிறப்புப்பெற வேண்டும் என்று இந்துக்கள் எல்லோரிடமும் வேண்டுகோள் விடுகிறேன்.

“சைவன்” தமிழ் மக்கள் வாழும் பகுதியெல்லாம் வலம் வருவான். இவ்வேளை உங்களின் அமோக வரவேற்பையும் வேண்டி நிற்கிறான். மதம் மாற்றம் பற்றி வாய் கிழியக் கத்துவதை விட்டு விட்டு செயலுருவில் செயற்படுவோம். **நல்லதை இன்றே செய்வோம். இல்லையேல் என்றுமே செய்ய முடியாது. ஆதியிலே இல்லாமல் பாதியிலே வந்த பல மதத்தினர் தங்களுக்குள்ளே மிருக உணர்வை வளர்க்கிறார்கள். மிருகத்தை உண்பவர்களால் மிருக உணர்வை மட்டுமே வெளிப்படுத்த முடியும்.** ஆதலால் நாம் எல்லோரும் வேற்றுமையைப் புறந்தள்ளி விட்டு “இந்து” என்ற எண்ணக்கரு கொண்டு இனிமையுடன் வாழ்வதற்கு ஒன்று சேருவோம். **ஆடம்பரமின்மை, தற்பெருமையின்மை. அகங்காரமின்மை, அகிம்சை, பொறுமை, நேர்மை, குருசேவை, தூய்மை, விடாமுயற்சி, தன்னடக்கம், தாய்தந்தை அடிபணிதல் போன்ற நற்காரியங்களை தன்னகத்தே உள்ளடக்கியதே இந்து மதமாகும்.** இந்து என்று கூறுவதில் பெருமையில்லை. இந்துவாக வாழ்வதில் மட்டுமே இந்துவுக்கு பெருமை சேர்க்கும்.

## "இந்துவாக வாழ்வோம் இந்து தர்மம் காப்போம்"

என்ற எமது கோட்பாட்டிற்கிணங்க இன்றிலிருந்து புனித இந்துவாக சமய அனுட்டானங்களை கடைப்பிடித்து வாழுங்கள் என்று வேண்டுகோள் விடுக்கிறேன்

**மேலும் என் அன்பு இந்துக்களுக்கு! அன்பு கலந்த பணிவான வணக்கம்!**

தங்கத்தமிழன் தரணியெங்கும் தலை நிமிர்ந்து வாழ வழி பிறந்துவிட்டது இந்த அமைதியான சூழ்நிலை என்றும் தொடர்ந்திட இந்துக்கள் நாம் எல்லோரும் ஒன்று கூடி இறை பணியில் ஈடுபட்டு இந்த அமைதியைத் தொடரச் செய்வோம்.தினமும் கோவிலுக்குச் செல்வோம் தினமும் நெற்றியில் திருநீறு அணிவோம். பசுவதை செய்வதைத் தடுப்போம் எமது மதத்திலிருந்து வேற்று மதம் நாடிச் செல்வோரை தடுப்போம் முடியாவிடின் எமது சமூகத்திலிருந்து ஒதுக்கி வைப்போம்.

"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது"
"எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கிறது"
"எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும"

**கீதையைப் புரிந்து கொள்ளுங்கள்**

சைவனின் செயற்பாட்டில் உங்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு மிக அவசியம். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, களியாட்டங்களில் ஈடுபடாமல் இந்துக்களாகமட்டுமே வாழ்வோம். சுதந்திரமும் சமத்துமமும் உள்ள பிரஜையாக வாழ அடிப்படை உரிமைகளைப் பெற சொந்த நாட்டில் அகதி வாழ்வை போக்க தெய்வீக சக்திக்குள் ஒன்றிணைவோம். துன்பங்களில் துவழும் இந்துக்களுக்கு "சைவன்" நிச்சயம் தோள் கொடுப்பான். "சைவனுக்காக" ஒருநாளைக்கு ஒரு ரூபாய் முப்பது சதம் மட்டுமே மீதப்பபடுத்தப்பட வேண்டும்

கடமையே உன் விதி செய்க பலனினைக் கருதிடல் வேண்டா!
கடமையைச் செய் பலன் எனதே!
களத்தினில் வீரமே கடமை!
எடுத்திடு வில்லினை!
கணையைத் தொடுத்திடு பகைவரை நோக்கி!
விடுத்திடு உன் குலக்கரையை!
வில்லினை ஒலித்திடு வீரா!

**இது கண்ணனின் வீர வாசகம்**

**கடமையை ஆற்றிடும் போது கலங்குதல் என்றுமே தவறு!**
**கடமைக்கு பந்தமும் குருவும் இடராக இருப்பினும் செய்க**

**இறைபணியிலுள்ள**
**இராசையா நாகேந்திரராஜா**
**நூலாசிரியர்.**



ஓம்
நம சிவாய

# ஆசியுரை

*பிரம்மஸ்ரீ சுப்ர கௌரிபால சிவாச்சாரியார்*
*பிரதம குரு*
*முருகமூர்த்தி தேவஸ்தானம்*
*நெல்லியடி.*

" பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரணவற் புதமலர்தலைக் கணிவோமே"

நெல்லையம் பதியிலே வீற்றிருந்து அருள் பாலித்துக்கொண்டிருக்கும் முருகப் பெருமான் திருவடிகளைவணங்கிபிரார்த்தித்து.

இந்து சமயம் எனப்படுவது "ஒழுக்கம் , உண்மை" என்னும் இரண்டினை வலியுறுத்தும். அவற்றுள் ஒழுக்கம் உண்மையை அடிப்படையாகக் கொண்டதே உண்மை அல்லது தத்துவம் என்பதை அடிப்படையாகக் கொள்ளாத பொழுது ஒழுக்கம் பொருளற்றதாகிவிடும். எனவே தத்துவம் எனப்படும் உண்மைகளே இந்து சமயத்தின் உயிர் நாடியாம்.

தேவானாம் பத்ரா ஸீமதிர் ரிஜீயதாம்
தேவானாம் ராதிரபி நோ நிவர்த்தாம்
தேவானாம் ஸக்யமுப ஸேதிமா லயம்
தேவா ந ஆயு: ப்ரதிரந்து ஜீவஸே!

மங்கலமான தேவர்களின் நல்லாசிகள் நம்மீது நிலவட்டும்.
அவர்களின் வரங்கள் நமக்கும் பெருகட்டும்
அவர்களின் நட்பு நமக்கு கிடைக்கட்டும்
இங்கே நாம் நீண்டகாலம் வாழ்வதற்கான
ஆயுளை அவர்கள் நமக்குத் தரட்டும்!

எம்மதமும் சம்மதம் என்று கூறித்திரிபவர்களுக்கு "சைவன்" வரவு பேரிடியாக அமையும் என்பதில் ஐயமில்லை. எப்படியும் வாழலாம், கோவிலுக்கு செல்வது அவசியமில்லை, குருவை வணங்குவது முக்கியமில்லை என்போர்க்கெல்லாம் "சைவன்" தகுந்த பாடம் படிப்பிப்பான். "சைவனின்" வரவை நாம் உள அன்போடு வரவேற்கிறோம்.

அகில இலங்கை சைவன் நற்பணி மன்றச் செயலாளர் நாயகம் பெருமதிப்புக்கும் அன்பிற்கும் உரிய திரு. இராசையா நாகேந்திரராஜா அவர்கள் தன் பெருமுயற்சியினால் "சைவன்" என்ற நூலை 10-12-2004 வெள்ளிக்கிழமை அன்று வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். "சைவன்" இந்து சமய மக்களாகிய நமக்கெல்லாம் பயன் தரும் நூலாக அமையும். "சைவன்" உலகெங்கணும் உள்ள சைவ சமய மக்களை சென்றடைய வேண்டும் "சைவன்" என்ற இதழின் ஆசிரியரும் , இவரின் குடும்பத்தினரும் சைவப்பாரம்பரிய சூழலிலேதான்வாழ்கிறார்கள்.சைவப் பழக்கவழக்கங்களுடன் முழுமையான சைவமாகவே வாழ்ந்தும் வருகிறார். இவரின் தனிப்பட்ட முயற்சிக்கு எம்மைப்போன்ற குருமார்களின் ஒத்துழைப்பு என்றும் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். சைவன் இதழின் புதுமை என்னவெனில் பாடசாலை சமூகத்தை மட்டுமே உள்வாங்கி வெளிவருகிறது. இவ்வளவு காலமும் இப்படியான முயற்சியில் யாருமே ஈடுபட்டதில்லை இதிலும் விசேடமாக "மதமாற்றம் பற்றி" மிகவும் காட்டமான கருத்துக்களை எனது மதிப்பிற்குரிய அதிபர் செ.சேதுராஜா வழங்கியுள்ளார். மேலும் விசேடமாக ஆசிச்செய்தியை அமெரிக்கத்துறவியான வணக்கத்திற்குரிய சுவாமிஜி தந்திரதேவா மகாராஜ் அவர்கள் வழங்கியுள்ளார் அத்துடன் வாழ்த்துரையை எனது அன்புக்குரிய வல்வை சிதம்பராக்கல்லூரி அதிபரும்,சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை செயலாளருமான திரு ந.அரியரட்ணம் வழங்கியுள்ளார்.பாராட்டுச்செய்தியை வடமராட்சி மத்தியமகளீர் கல்லூரி அதிபர் திருமதி வி.சுகுமாரன் வழங்கியுள்ளார் இப்படியாக கூட்டுக்குடும்பமாக மிகவும் சிறப்பாக சைவனை வெளியிடுகிறார் .

மேன் மேலும் அவரின் இந்தப்பணி தொடர வேண்டுமென்று இறைவனை வேண்டி எல்லாம் வல்ல முருகப்பெருமான் திருவருள் அவருக்குக்கிடைத்து எல்லாச் செல்வங்களும் பெற்று நீடூழி வாழ வேண்டும் ஆசிகள் பல கூறி வாழ்த்துகிறேன்.



# ஆசிச்செய்தி

"இந்து தர்ம பிரசார சாகரர்"

**சுவாமிஜீ தந்திர தேவா மகராஜ்**

*தலைவர், அகில இலங்கை இந்து சமய அபிவிருத்திச்சபை*

இந்து ஆலயங்களில் ஒலிபெருக்கிகளில் பக்தர்களின் பக்திப் பாடல்களே ஒலிக்க வேண்டும் பஜனைகள் கேட்க வேண்டும். இதற்கே ஒலிபெருக்கிகள் பயன்பட வேண்டும். மாறாக ஒலிபெருக்கிகளில், ஒலிநாடாக்களின் இசை மட்டும் பெரும்பாலான ஆலயங்களில் ஒலி பரப்பாகின்றன. கடவுளுடைய புனித நாமங்களைச் சொல்வதற்கு நாங்கள் வெட்கப்பட வேண்டியதில்லை பஜனைகள் மற்றும் ஆலய மணியோசை, மந்திர ஓசை போன்றவை மனிதனைக் காப்பாற்றும். ஆயினும் சில மனிதர்கள் கடவுளின் புனித நாமப் பாடல்களைப் பாடவிரும்புவதில்லை. ஆனால் இவர்கள் ஆபத்துக்கள் நேர்ந்த வேளையில் பாதுகாப்புத்தேடி உடனடியாகக் "கடவுளே" என்று கத்திக் கொள்வார்கள்

இந்து மக்களின் வழிமுறைகளைத் தெளிவுபடுத்தவே "சைவன்" வெளிவருகிறான்

ஆதி சங்கரர் இஷ்ட தெய்வ தத்துவத்தை ஸ்தாபித்தார்.அதாவது சிவன்,சக்தி,விஷ்ணு,கணபதி,சுப்பிரமணியர்,சூரியன் போன்ற தெய்வங்களே விரும்பிய வழிபாடாகும்.இந்த உருவங்கள் எல்லாமே ஒன்றுதான்.ஒரு மனிதன் வெவ்வேறு நேரங்களில் விதம் விதமான உடைகளை மாறி மாறி அணிகின்றான்.ஆயினும் அம்மனிதன் ஒரே ஆளாகத்தான் இருப்பான்.இந்து சமயத்திலும் ஒரேயொரு தெய்வந்தான் உண்டு.ஆனால் பல உருவிலும் தோற்றமளிப்பார்.சில சமயங்களில் சொல்கிறார்கள் உருவவழிபாடு கூடாது என்று.ஆயினும் அந்த சமய பக்தர்கள் நெற்றியிலே வைக்கப்பட்ட உருவங்கள் எல்லாம்மனத்தை ஒரு முகப்படுத்துவதற்கு அனுகூலமானவை.

மனிதனுக்கு இறை விசுவாசம் அசையாத மாதிரி இருக்க வேண்டும் பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்த்த பிள்ளையார் என்பன போன்ற பாடல்களைப்பாடுகின்றோம். பிள்ளையார் கொடுத்தால் பெருமைவாய்ந்த பிள்யையர்என்று பாடமாட்டோம் மனம் தூய்மைப் படுவவற்கு நாங்கள் இறைவனைத்துதி செய்ய வேண்டும்.சனி,வியாழன் போன்ற கிரகங்கள் மாறலாம்.எங்கள் விசுவாசம் அசையாமல் இருக்கவேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவிதமான ஆசீர் வாதங்களும் வந்து சேரும்

ஒவ்வொரு இந்துவும் சைவனுக்கு ஆதரவு வழங்க வேண்டும்

இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் இசையுடன் இந்துமத வழிபாடுகளை மதிக்க வேண்டும். இது போன்ற இளைஞர்கள் சமய அறிவு வளர்க்கும் சந்தர்ப்பங்களை மதிக்கவேண்டும். உலகத்தில் பணக்காரன்,சொத்துள்ளவன் பெரிய உத்தியோகத்தர் முதலிய பதவி இருந்தால் மட்டும் மன அமைதி கொடுக்க முடியாது. எல்லா ஜீவராசிகளும் வழிபாடு மேற்கொள்ள வேண்டும். மாணவர்கள் கிருஷ்ணலீலைகள் பற்றித்தெரியாமல், நால்வர்களின் சரித்திரங்கள் பற்றித்தெரியாமல் அம்மாணவர்களுடைய நெற்றியில் விபூதி பூசுவது பிரயோசனம் இல்லாமற் போகும் இவ்வகையில் பெரியவர்கள் வேதாந்த அல்லது சித்தாந்த அடிப்படைக் கோட்பாடுகள் தெரியாவிட்டால் அவர்கள் **நான் ஒரு இந்து என்று** சொல்வதில் பிரயோசனம் இல்லாமல் இருக்கும். சகல இந்து மாணவாகளையும் குறைந்தபட்சம் வாரம் தோறும் ஒரு முறை பஜனை சமய வகுப்புக்களில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும். தற்காலத்தில் ஏராளமான இந்து ஆலயங்களில் இவ்வாறான நடைமுறைகள் இடம்பெறவில்லை என்பது ஒரு பெரிய குறைபாடாகும். சில ஆலயங்களில் பிரதான விடயம் பொங்கற்பானை போல் தெரிகிறது. ஆலய அர்ச்சகர்கள் பிரார்த்தனை மந்திரங்கள் ஓதுவார்கள், ஏனையவர்களிடம் இருந்து எந்தவிதமான பிரார்த்தனைகளையும் காணமுடியவில்லை. பழங்காலத்தில் ஔவையார் **விநாயகர் அகவல்** இயற்றினார். ஆனால் தற்காலத்தில் சிலபக்தர்கள் அத்துடன் நிறைய மாணவர்கள் **விநாயகர் அகப்பைக்குத்தான்** முக்கிய இடம் கொடுக்கிறார்கள். இச்சூழ்நிலை மாற்றப்பட வேண்டியுள்ளது. உண்மையான வழிபாட்டிற்காக ஆலயத்திற்கு நாம் செல்லவேண்டும்.(அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும் ஆலய வழிபாடில்லை) அதற்குப்பின் பிரசாதம் பெற்றுக்கொண்டால் தீமை இல்லை.

ஒரு நல்ல பூசாரி இசை மூலம் பத்தியை ஊக்குவிப்பார்

சங்கா பாஜை கந்தா பாஜை
பாஜை பாஜை கரத்தாளா
மதுரா மிருதங்க பாஜை
பரம ரசாலா

அதாவது சங்குடன், மணியுடன், தாளத்துடன் இனிமையான மிருதங்க ஓசையுடன் வணங்குகிறோம். இவ்வழிபாடு மிக ரசனையானது. குடும்ப ஒற்றுமையை விரும்பும் அங்கத்தவர்கள் சேர்ந்து பிரார்த்தனை செய்தால் நல்லது. பெற்றோர்கள் உதாரண சீலர்களாக முன்னின்று குடும்ப பஜனை நடத்துதல் சிறப்பானது. பஜனை மனிதனை

ஒழுக்க சீலனாக வாழ வைக்கும் என்பதை நிலைநிறுத்தவே "சைவன" உங்கள் முன் வருகிறான். ஒவ்வொரு இந்துவும் சைவனுக்கு ஆதரவு வழங்க வேண்டும். சில பெற்றோர்கள் மாணவர்களை பஜனை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு நேரமில்லை என்று குறிப்பிடுகிறார்கள். இவ்வாறான வேஷத்தால் இந்து மதம் பாதிக்கப்படுகிறது **பஜனை செய்வதன் நோக்கம் மாமுனிவர்கள் சன்னியாசிகள் ஆகவேண்டும் என்பது அல்ல.** எல்லா இந்துக்களும் ஆசார முறையில் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் பஜனை செய்கிறோம் வாழ்க்கை முறையுடன் மௌன தியானம்,மாலையுடன் நாப ஜெபம்,கீர்த்தனம் போன்ற பழக்கங்கள் வேண்டும். பஜனை என்ற சொல் பஜ-வழிபாடு,ஜன-மக்கள் அதாவது மக்கள் ஒன்று கூடி கடவுளை வழிபடுதலே என்று பொருள்படும். பஜனையின் பெயர் கீர்த்தனம். அதாவது கடவுளுக்கு கீர்த்தி கொடுத்தல். நகர சங்கீர்தனம் என்பது வீதி வீதியாக பஜனை பாடுவது பக்தியோக தத்துவ ரீதியாக வைஷ்னவ சம்பிரதாயங்களைப் பொறுத்த வரை ஒன்பது வழிபாட்டு அம்சங்கள் அடங்கியுள்ளன. சிரவண-விஷ்னு அவதாரங்களின் புனிதக் கதைகள் கேட்க வேண்டும் கீர்த்தனை-கடவுள் மீது புகழ் பாடுதல்: அதாவது பஜனை செய்ய வேண்டும். ஸ்மரண - இறைவனின் நினைவு வந்தனை உ வணங்க வேண்டும்: பாத சேவன - விஷ்னுவின் பாதத்திற்கு வேவை செய்யவேண்டும். தாஸ்ய உ புனித தொண்டு செய்ய வேண்டும்.; பூஜனை உ அவதார ரூபங்களிற்கு ஆராதனை செய்ய வேண்டும் ; சகிஜன - இறைவனுடைய நண்பன் போல் இருக்க வேண்டும் :ஆத்ம நிவேதனம் என்பது முழு வாழ்க்கையையும் கடவுளுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். சிவரண, கீர்த்தன இரண்டும் மிகத் தொடர்புள்ளவை. நாங்கள் ஒருமுறை கடுமையான வெந்நீர் குடித்தால் நாக்கு அவிந்துள்ளதை அனுபவிக்கினறோம். பின்னர் சாப்பிடுகிற உணவு சுவையாக இருப்பது இல்லை. ஆயினும் பசி காரணத்தால் சமாளித்து சாப்பிடுகிறோம். இவ்வகையில் சில பக்தர்கள் பஜனை செய்கிறார்கள். அதாவது எதைப்பற்றி பாடினார்கள் என்பதை ஒன்றும் புரிந்து கொள்ளாது பாடுவார்கள். சில நேரம் பாடும் போது பகவானின் நாமத்தில் அளவு புரிந்து கொள்வதில்லை. இது அவிந்த நாக்குடன் உண்ணுவது போன்றது. எனவே கீர்த்தனை செய்வதில் மேலான நன்மைகளை விரும்பினால் முதலில் சிரவண வேண்டும். உதாரணமாக மண்ணையுண்ட கண்ணனாம் என்பது என்ன சம்பவம் பற்றியது? பாலகிருஷ்னன் பலராமனுடன் விளையாடும் போது கண்ணனுடைய வாயுள்ளே உலகத்தைப் பார்த்தாள் என்பது பற்றியது பஜனை பாடும் போது கூடுதலாக நாம் இராகத்தோடு பாடுவதில் மட்டுமே அதன் பலனை முற்று முழுதாக அனுபவிக்க முடியும். எமது சமயத்தில் பஜனை முக்கியமானது என்பதை உணர்த்தவே சைவன் உலாவரப்போகிறான்.

"நச்சுப் பாம்பு மீதிலே" என்பது என்ன? கோபாலன் ஜமுனை நதியிலே காலிங்கன் என்னும் பாம்பு மீதிலே நடனமாடினான் என்பதாகும். சைவத்தினைப் பொறுத்த வரை திருஞானசம்பந்தர் **கோளாறு திருப்பதிகம்** எதற்காகப் பாடினார்? திருநாவுக்கரசர் **சலம்பூவோடு தூபம்** எதற்காகப் பாடினார்? இக்கதைகள் தெரிந்திருந்தால் பஜனைகளில் அத்தேவாரங்கள் ஒரு கூடிய சந்தோசமான உயர்ந்த பலனைத் தரும். ஆகையால் சிரவண மூலமும் கீர்த்தனை செய்தல் ஒரு மேலான பயனுடையதாகும். ஆலய பூசாரிகள் பூசைக்கடமையை மட்டும் மேற்கொள்ள வேண்டாம். மேலும் பூசையுடன் பஜனை, அறநெறி வகுப்புகள், பக்தி உபந்நியாசங்கள் முதலியனவற்றை ஊக்குவிக்க வேண்டும். ஆலயக்குருக்கள் மற்றும் கோவில் நிர்வாக சபையினர் வெள்ளிக்கிழமைகளில் சரி சமய போதனை செய்யவேண்டும். மேலும் வெள்ளிக் கிழமைகளில் மாலை வேளைகளில் சகல இந்துக்களும் கோவிலுக்கு செல்ல வேண்டும். இந்து சமயத்தவர் வேலை செய்யும் சகல நிறுவனங்களையும், அரச நிறுவனங்களையும் ஒன்று கூட்டி அங்கு வேலை செய்யும் இந்துக்களை கோவிலுக்குச் செல்லும் படி பணிக்க வேண்டும்.

**இந்துக்களே நீங்கள் ஒவ்வொருவரும் சைவன் என்ற எண்ணக்கருவோடு வாழவேண்டுமென்று, எனது வழிகாட்டலில் எனது அன்பிற்குரிய திரு.இராசையா.நாகேந்திரராஜா தனது தனிப்பட்ட முயற்சியினால் சைவன் என்ற இதழை வெளியிடுகிறார். சைவன் மூன்று மாதத்திற்கு ஒருதடவை காலாண்டு இதழாக உலாவரப்போகிறான். "சைவன்" வெற்றி பெற எனது இதய பூர்வ ஆசியையும் அன்பையும் வாரி வழங்குகிறேன்.அவரின் சமயப் பணிகள் மென்மேலும் தளைத்தோங்க எனது நல்லாசிகள் உரித்தாகட்டும்.**

நன்றி.
அன்பே சிவம்



# வாழ்த்துரை


**ந. அரியரத்தினம்**
*அதிபர்*
*யா/வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி*

*செயலாளர்*
*சந்நிதியான்ஆச்சிரம்,*
*சைவ கலைப் பண்பாட்டுப் பேரவை*


உமது சமயத்தில் ஆத்மீக சஞ்சிகைகள் வெளிவருவதும், எமது மண்ணிலிருந்து வெளிவருவதும் அதுமட்டுமன்றி "சைவன்" உயிர்த்துடிப்புள்ளதாக பலபேருடையகூட்டுமுயற்சியினடிப்படையில் வெளிவரும் வரவேற்கத்தக்க விடயமாகும். "சைவன்" மதமாற்றம் பற்றி கடுமையான வாதங்களுடன் வெளிவருவதும் மேலும் சிறப்பைத்தரும் விடயமாகும். "சைவன்" இந்துக்களாகவே மட்டுமே வாழும் அனைவருக்கும் சிறப்பைத் தருவான் என்பதை எண்ணியும் நாம் மகிழ்வடைகிறோம்.

இவ்வாறான முயற்சியில் அகில இலங்கை சைவன் நற்பணி மன்றம் ஈடுபட்டுக்கொண்டிருப்பதும், அதன் செயலாளர் நாயகம் இராசையா .நாகேந்திரராஜா முழுமையான அர்ப்பணிப்புடன் தானம் ஈடுபட்டு மற்றவர்களையும் அதில் பங்குபற்றி செயற்படுமாறு உற்சாகத்துடன் தூண்டிக் கொண்டிருப்பதுடன், பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று சமயக் கருத்துக்களையும் எடுத்துக் கூறிவருவதும் பாராட்டப்படவேண்டிய விடயங்களாகும்.

"சைவன்" என்ற இந்த இதழ் காலாண்டு இதழின் இரண்டாவது இதழாகும். ஒரு பாடசாலை சமூகத்தைத் தளமாகக் கொண்டு வெளிவருவது பலவகைச் சிறப்புக்களைப் பெறுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. முக்கிமாக மாணவ சமூதாயத்தை சமயத்துடனம், சஞ்சிகையுடனும் இணைக்கிற செயற்பாடு இதுவரை யாரும் செய்யத்துணிந்ததில்லை. இராசையா நாகேந்திரராஜா

துடிதுடிப்புடன், மகிழ்வுடனும் இப்பணியை ஆற்றிவருவது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். ஆத்மிக சஞ்சிகை வெளியீடு என்பது இன்றைய காலகட்டத்தில் பல பிரச்சினைகளையும், சிக்கல்களையும் தாண்டி முழுமையான அர்பணிப்புகளுக்கூடாகவே வெளிவரவேண்டிய சூழ்நிலை இருப்பதனால் நல்ல எள்ளம் படைத்த சைவ மக்கள் தமது ஆதரவையும், ஒத்துழைப்பையும் சைவன் இதழுக்கு வழங்குவது அவசியமாகும். திரு இராசையா. நாகேந்திரராஜா மலர் வெளியீட்டினை மட்டுமன்றி பல்வேறு சமயங்களில் உண்மையான உணர்வுகளுடன் ஈடுபடுவது எமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. தற்பொளுது சந்நிதியான் ஆச்சிரமத்தினரால் வழங்கப்படும் பாலர் பாடசாலைகளுக்கான சத்துணவு மேற்பார்வையாளராகவும் தமது காத்திரமான பங்களிப்பை நல்கி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரது சமயப்பணிகள் அனைத்தும் தொடர்வதற்கும் அவரது செயற்பாடுமளில் அவர் வெற்றியடையவும் "சைவன்" வெற்றிபெறவும் எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

வாழ்க தமிழ்! வளர்க "சைவன்"


சைவன் வெற்றி பெற வாழ்த்துவோர்

**நெல்லை சில்க்**
நவநாகரிக ஆடைகளுக்கு
நாடவேண்டிய இடம்.
பிரதான வீதி
நெல்லியடி

**யசோ சில்க்**
நவநாகரிக ஆடைகளுக்கு
நாடவேண்டிய இடம்.
பிரதான வீதி
நெல்லியடி

**சிதம்பரப்பிள்ளை பொத்தகச் சோலை**
பிரதான வீதி
நெல்லியடி

**வைஷ்ணவி நகை மாடம்**
இல.23
பிரதான வீதி
நெல்லியடி

# வாழ்த்துச் செய்தி

எமது சுவாமி தந்திரதேவாவின் வழிகாட்டலில் சமயப்பணிகளில் ஈடுபட்டு இராசையா நாகேந்திரராஜாவின் "சைவன்" வெளிவருவதையிட்டு, வாழ்த்துச் செய்தி வழங்குவதை எண்ணியும் நாம் மகிழ்வடைகிறேம்.

இன்று மனித சமூதாயத்தில் மலிந்து கிடக்கும் எண்ணற்ற தீய பழக்க வழக்கங்களினால் வழமையாக எம்மக்கள் கடைப்பிடித்து வந்த அறஒ ழுக்கப் பண்பாடுகள் நழுவவிடன்னட்டமையாலும் எமது மக்களை துயரங்களுமஂ. அமைதினடமையும் ஆக்கிரமிப்பு அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றது.

இக்கால கட்டத்தில் நாம் பின்பற்றக் கூடியதும். மிக இலகுவானதும் எல்லோராலும் செய்யக்கூடியதுகான இறைநாம ஜெபம். எக்காலத்திலும் உயர்தது என்பது வேதவழியான உண்மையாகும்.

சமயகுரவர்கள், ஆழ்வார்கள், ஞானியர்கள் சித்தர்கள் போன்றோர் தமது வெளிப்பாடுகளைப் பாடல்கள் மூலம் வெளிப்படித்தியுள்ளார்கள். தெய்வீகத்தன்மையும் தூய்மையும், உயர்ந்த சக்தியும் கொண்ட இப்பாடல்களில் மூலம் உலக மக்களின் துன்பம்., துயரங்கள் நீங்யுள்ளது. நோய்கள் முற்றாக இல்லாமல் போயின இவை தெய்வீகத்தன்மை தனமை கொண்ட பாடல்கட்கு உண்டு என்பது அசைக்கமுடியாத உண்மையாகும்.

உலகில் உள்ள அனேக மதங்கள் இன்று இந்து மதக்கோட்பாட்டில் உண்மை நிலையை உணர்ந்து வருகின்றன. இறைநாம ஜெபம், பஜனை என்பன மன அமைதியையும் மனித உள்ளத்தில் சாந்தியையும் தரும் என்பது நன்குணரப்பட்டுள்ளது.

ஒரு மனிதன் தனது மனதைஒரு நிலைப்படுத்துவதற்குத் தியானம் துணை செய்கிறது. இது எப்படி இலகுவாக வரும் அதற்கு ஒரு இலகுவான வழி பஜனையே ஆகும். தொடர்ந்து ஒரு சில நிமிடங்கள் ஒருவர் பஜனை மூலம் அணைவார் ஆயின் படிப்படியாக பூரணசாந்தியைத்தரும் என்பது உண்மையாகும்.

2) அமைவதே "சைவன்" இதழின் நோக்கமாகவுள்ளது. "சைவன்"எமதுசமய விடயங்கள் அனைத்தையும் எள்வாங்கச் சிறப்பாக வெளிவருகிறான்."சைவன்" இதழ் படிப்பவர்கள், தானும் சைவனாக வாழ ஆசைப்படுபவர்கள். "சைவன்" அனைவரையும் அன்புடன் அரவணைப்பான் என்று நான் நம்புகிறேன், "சைவன்" அசிரியரின் துடிப்பான செயலுக்கு என்றும் நாம் பக்க பலனாக அருப்போம். "சைவன;" வெற்றிபெற எமது குருகுலம் சார்பிலும், எமது சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

ஸ்ரீபத் சுவாமி தந்திரதேவா மகலாஜ் ஆத்ம ஈடேற்றத்திற்கும் மனித குலமேம்பாட்டிற்கும் மகத்தான பணியில் "இந்து மதம் எம்மதம்" "இந்து மதம் காப்போம்" என்பதை அடிப்படையாகக் கொண்டு இந்து சமய மறுமலர்ச்சிக்குத் தன்னையே அர்ப்பணித்த ஓர் யுகபுருசராவர் என்பது மனிதநேயம்களிக்கிடையே ஆழமாகப்பதிந்துள்ளது. இதனை வெளிக்கொணரும் ஓர் நற்செயலாகவே திருநாவக்கரசுநாயனார் குருகுலம் "இந்து தர்ம பிரசார சாகரர்"எனும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. திருநாவுக்கரசுநாயனார் குருகுலத்தின் சிறுவரில்லப் பணிகளிலும், இந்து சமயத்தை வலுப்படுத்தும் அம்சத்திட்டத்திலும் சுவாமி சவாமி தந்திரதேவா மகராஜ் அவாகள் ஆற்றய; ஆற்றுகின்ற உதவிகளும் வழிகாட்டலும் ஒத்துழைப்பும், நன்றியுணர்வோடு நினைவு கூறப்படவேண்டிய பசும்சுவடுகளாக எங்கள் உள்ளங்களில் பதிந்தள்ளது. மனிதனை மனிதனாக நல்லொழுக்கங்களைக் கருத்தும் காணக் கிரகித்து உளம் கொள்ள உதவுவதாக

திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தை ஆக்கி அழித்த பெருந்தகை ஸ்ரீமத் சுவாமி தம்பையா அடிகளாரது ஆசீர்வாதங்களடன் இத்தெய்விகப்பணி மூலம் நாமும் சமூதாயம் பயன்பெற வேண்டும் என இறைவனை இறைஞ்சி எமது வாழ்த்துக்களைச் சமர்ப்பணம் செய்கிறேன்.

ஓம் நம சிவாய
என்கடன் பணிசெய்து கிடப்பதே

**குருகுலசேவையில்**
**கணை. இராசரெட்த்தினம்**
**முகாமைப்பணிப்பாளர்**
**திருநாவுக்கரசு நாயனார் குருகுலம், தம்பிலுவில்**



# மதமாற்றம்

திரு.சி.சேதுராஜா
அதிபர்
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

உலகிலுள்ள ஒவ்வொரு மதமும் மனித வாழ்வின் உயர்வுக்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழி காட்டும் பணிகளை மேற் கொண்டு வருவதாகவே கொள்ளப்படுகின்றது. பாதைகளும் பயணங்களும் வேறுபட்டவைகளாகக் காணப்படுகின்ற போதிலும், இறுதியில் சென்றடையும் இலக்கு ஒன்றே எனக்கொண்டு சர்வமதச் சமாதானக் கோட்பாடுகள் நன் நோக்கில் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும், இந்து மதக்கோட்பாடுகளினைஅவற்றின் ஆழம், அகலம், வியாபிதம் என்னும் பண்புகளினடிப்படையில் ஆராய்வோமாயின் இந்து மதத்தின் சிறப்பினை உணர்ந்து கொள்ள முடியும்.

இந்து மதத்தின் தோற்றமும் வளர்ச்சியும் வேறெந்த மதத்திலிருந்தோ நாகரிகத்திலிருந்தோ ஏற்பட்டதெனக் கொள்வதற்கு இயலாது. உலகின் உன்னதமான தலை சிறந்த கோட்பாடுகளையும் அக் கோட்பாடுகளின் வழி வாழ்ந்து காட்டிய முனிவர்களையும் அவதார புருஷர்களையும் போஷித்து மானிட வாழ்விற்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் உறுதுணையாக நின்று வழி காட்டுகின்ற ஒரு வியாபித ஒளியாக இந்து மதம் பிரகாசிக்கின்றது. உலகில் வாழும் எல்லா உயிர்களுக்கும் ஆதரவினையும், அபயத்தினையும் அளிக்கின்ற ஒரு மாபெரும் விருட்சம் போன்றதே இந்து மதமாகும்.

இந்து மதமானது உலகின் தலை சிறந்த கோட்பாடுகளையுடையது. இது ஒரு அவதார புருஷரையோ அல்லது ஒரு சில மகான்களையோ மாத்திரம் மையமாகக் கொண்டு எழுந்த மதமன்று. உலகிலுள்ளஎல்லாவிதமான தர்மசாத்திரங்களும் அற நெறிகளும் இந்து மதம் என்றும் மெய்ஞானக் கடலினுள் சங்கமிக்கின்றன. மெய்ஞானமும் விஞ்ஞானமும் இந்து மதக் கோட்பாடுகளின் ஊற்றுக்களாகும். எந்தவொரு சாமானிய மனிதனும் இந்து மதக் கோட்பாடுகளையும் நெறிமுறைகளையும்

தத்தமது தகுதி நிலைக்களமாகவே பின்பற்றி வாழ்ந்து ஆன்ம ஈடேற்றத்தைப் பெறத்தக்க அறநெறிகள் இந்து மதத்தில் அடங்கியிருப்பது அதன் நிலைபேற்றிற்கான அடிப்படைக் காரணமாகும். எந்நிலையிலுள்ளோரும் உலகியல் வாழ்விலும் ஆன்மீக வாழ்விலும் உயர்நிலையெய்திய வரலாறுகள் இந்து மதத்தில் ஏராளம் உள்ளன.

உலகிலுள்ள மதங்களனைத்திலும் இந்து மதம் மாத்திரமே தனி மனிதர்களது வரலாறுகளைச் சார்ந்த கோட்பாடுகளைக் கொண்டிராத மதமாகக் கொள்ளப்படுகின்றது. அவதார புருஷர்களும் மகரிஷிகளும் இந்து மதக் கோட்பாடுகளின் வழி வாழ்ந்து காட்டினார்களேயன்றி அவர்களது வாழ்க்கை முறைகளால் இந்து மதக் கோட்பாடுகள் உருவாக்கப் பட்டிருக்கவில்லை. தனி மனிதர்களையோ ஒரு சில அவதார புருஷர்களையோ அவர்களது வாழ்க்கை முறைகளையோ மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கோட்பாடுகளை உருவாக்கிக் கொண்டுள்ள பின்னைய காலத்து மதங்கள் அந்த அவதார புருஷர்களது அவதாரத் தன்மையோ அல்லது அவர்களது வாழ்க்கை நெறிகளோ காலவோட்டத்தில் உலகியலில் பலவீனப்பட நேரிட்டால் அவர்கள் வழி வந்த மதக் கோட்பாடுகளும் பலவீனப்பட வாய்ப்புக்களுள்ளன. ஆனால் இந்து மதக் கோட்பாடுகள் கோடிக்கணக்கான மனிதர்களதும் அவதார புருஷர்களதும் வாழ்க்கை நெறிகளால் வலுவூட்டப்பட்டனவேயன்றி அவர்களது வாழ்க்கை நெறிகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டவையன்று. பன்னெடுங் காலமாக பலவேறுபட்ட நலிவு பொலிவுகளுக்குள்ளேயும் இந்து மதமானது நின்று நிலைப்பதற்கானகாரணம் இதுவேயாகும்.

இந்து மத அவதார புருஷர்கள் எனப்படுவோர் இந்து மதக் கோட்பாடுகளின் ஒட்டு மொத்த வடிவமாக அவற்றின் வழி வாழ்ந்து காட்டுவதற்காக அவதாரமெடுத்தவர்களேயன்றி அக் கோட்பாடுகளை உருவாக்குபவர்களன்று. கோட்பாடுகள் நிலைத்திருக்குமேயானால் அவற்றைப் பின்பற்றுவதற்காக கோடிக் கணக்கானவர்கள் வருவார்கள். இந்து மதக் கோட்பாடுகளின் நிலை உலகில் அன்றும் இன்றும் ஒரே விதமானவை. இனி வரும் காலங்களிலும் அவ்வாறே அமையும். அக் கோட்பாடுகளின் உண்மைப் பொருளை எல்லைப்படுத்த முடியாதளவிற்கு அதன் ஆழம் கட்புலனாகாதுள்ளது. எளிமைக்கு எளிமையாயும் நுணுகி ஆராயப் புகின் கடினமாயும் அமைவது இந்து மதக் கோட்பாடாகும். ஈடு இணையற்ற எண்ணிறந்த உண்மைகளை இந்து மதக் கோட்பாடுகள் கொண்டுள்ளன.

உலகியலுக்கும், ஆன்ம ஈடேற்றத்திற்குமான உன்னத நிலையை அடைய விரும்பும் மனிதனொருவன் இந்து மதத்தை விட்டு வேறொரு செல்நெறி நாடிச் செல்ல முனைவது வெளிச்சம் வேண்டும் ஒருவன் சூரிய ஒளியை விட்டு மின்மினிப் பூச்சியின் வெளிச்சத்தினை நாடிச் செல்வதற்கு ஒப்பானதாகும்.

மதம் என்பது மனிதனால் சுதந்திரமாய் பின்பற்றப்படுவதாயிருத்தல் வேண்டும். பரந்த நோக்கங்களைக் கொண்டதாயமைதல் வேண்டும். ஏழை, எளிய மக்களது வறுமை நிலையினை சாதகமாகப் பயன்படுத்தி சில தற்காலிகமான உதவிகளைவழங்கி மக்களை வேறு மதங்களுக்கு மாற்றும் முயற்சிகள் மதங்களின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கே மாறுபட்ட செயல்களாகும். இது மக்களைத் தவறாக வழி நடத்தி மதச் சுதந்திரம் என்ற பதத்தினையே கேலிக்குள்ளாக்கும் செயன்முறையாகும். இவ்வாறான செயற்பாடுகள் மனித நாகரிகத்தின் மீதான அடியாகும். இவை கண்டிக்கத் தக்கன. சுதந்திரமென்பது சுயாதீனப் பண்பினைக் கொண்டிருத்தல் வேண்டும். மனித உரிமைகளின் அடிப்படையில் பார்க்கின்ற போதும் மக்களின் பலவீனங்களைப் பயன்படுத்தி மதமாற்றம் செய்விப்பதென்பது முரண்பட்டதாக அமைகின்றது.

மானிடம் வாழவும் மனிதன் ஆன்ம ஈடேற்றம் பெறவும் மதக் கோட்பாடுகளும் மதம் சார்ந்த செயற்பாடுகளும் ஆதரவளிப்பதாக அமைதல் வேண்டும். இதற்கான அனைத்துப் பண்புகளையும் கொண்ட மதம் இந்து மதமேயாகும். இன்று எவ்வித பிரச்சாரங்களோ குறுக்க வழி ஊக்குவிப்புக்களோ இன்றி மேற்கு நாட்டவர்கள் பல இலட்சம் பேர் இந்து மதக் கோட்பாடுகளையும் அதன் நெறி முறைகளையும் பின்பற்றுவதற்குத் தலைப்பட்டுள்ளமையானது இந்து மதக் கோட்பாடுகளின் உண்மை நிலையினையும் மேன்மை நிலையினையுமே புலப்படுத்துகின்றன. உலகில் அனைத்துத் தரப்பினரையும் உள் வாங்கக் கூடிய நெகிழ்ச்சியும் முதிர்ச்சியும் இந்த மதத்திற்கேயுரிய பண்பாகும். இந்து மதத்தில் இல்லாததொன்று உலகின் எந்த மதத்திலும் இல்லை.இந்து மதத்தின் புனிதம் உணர்த்தவே "சைவன்" உலா வருகிறான்.

# எமது சமயம்



ஆ.சிவநாதன்
ஆசிரியர்
யா/நெல்லியடி ம.ம.வி.
கரவெட்டி.

மனித மன உணர்வுகளை உடல் இச்சைகளைக் கட்டுப்படுத்தி மனிதனுக்கு சாந்தியையும் அமைதியையும் சமாதானத்தையும் அளித்து அவனை ஆனந்தப் பெருவாழ்விற்கு அழைத்தச் செல்வனவே மதங்கள். எல்லா மதங்களும் இந்த மகத்தான உண்மையை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் நதிகள்தாம். ஆனால் இவற்றிலே சிறப்பு வாய்ந்தது இந்து மதமே. எல்லா மதங்களும் நதிகள்தாம் எல்லா நதிகளிலும் வெள்ளம் ஓடுகிறதுதான் ஆனால் இவற்றிலே இந்து மதம் ஒரு சமுத்திரம்.

ஆம்.... அது ஒரு மஹாசமுத்திரம். ஒரு கொள்கை அல்லது ஒரு நீதி நெறி அது எந்த மதத்திலிருந்து உதித்திருந்தாலும் எந்த மதத்திற்குச் சொந்தமாக இருந்தாலும் எந்த மதத்தில் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டாலும் அது இந்து மதத்திலும் உண்டு என்ற சொல்லத்தக்க வண்ணம் சகல கோட்பாடுகளையும் தன்னிலே கொண்டு பரந்து விரிந்து, ஊடுருவி எங்கும் வியாபித்து, ஆழம் அகலம், நீளம் என்ற அளவுகளைக் கடந்து வளர்ந்துள்ள உலக மஹாசமுத்திரம், அது வாழ்வைத் துறந்து - கடந்து ஓட வேண்டும் என்ற கட்டில்லாது வாழ்விலிருந்தே சீரிய நெறியில் ஒழுகி சிந்தையைக் கட்டுப்படுத்தி தெய்வ தரிசனத்தைப் பெறமுடியும் என்ற உண்மையை எவர்க்கும் எளிதாக இணக்கமாக எடுத்துக் காட்டும் ஓர் ஒப்பற்ற மதம் இந்து மதம்.

மனிதன் என்பவன் ஆத்ம பலத்தோடு. ஆத்ம தூய்மையோடு மனித குலத்திற்கு பயனுற வாழ்வதன் மூலம்தான் மனித வாழ்க்கை பயன் அடைகிறது என்பதுதான் அதன் சிறந்த போதனை.

இரக்கம், அன்பு, கருணையைக் காட்டியசில மதங்கள் கடவுள் என்ற ஒன்றினைக் காட்டவில்லை. ஆனால் கடவுள் என்று ஒன்றைக் காட்டிய இந்து மதம் இரக்கம்அன்பு கருணையை விட்டு வைக்கவில்லை. வாழ்க்கையை "கர்மகாண்டம்" என்றும் "ஞானகாண்டம்" என்றும் பிரித்தது இந்துமதம்தான். உடல் இன்பத்தை ஏற்றுக் கொண்டது இந்து மதம். அதற்கு மேற்பட்ட துறவு நிலையிலும் ஆதிக்கம் செலுத்துவது இந்து

மதம். இன்பங்களுக்குச் சடங்கு செய்வதும் இந்துமதம். துன்பங்களுக்கு ஆறுதல் சொல்வதும் இந்து மதம் எனவேதான் எந்த நிலையிலும் ஓர் இந்துவுக்குக் கடவுள் நம்பிக்கை எழுந்து கொண்டேயிருக்கிறது. அந்த நம்பிக்கை இல்லாதவனும் மேற்சொன்ன நிலைகளுக்குத் தப்ப முடியாது.

இந்து மதத்தின் கடவுள் கொள்கை பெரும்பாலும் லௌதீகத்தை ஒட்டியதே. அங்கு குடும்ப வாழ்க்கையின் சகல கூறுகளும் தெய்வ அம்சங்களாகச் சித்தரிக்கப்பட்டிருக்கினறன. தெய்வமும் லௌதீகத்துக்குத் தப்பவில்லை. என்பதற்காக கடவுள்களைக் குடும்பங்களாகவும் வகுத்து லௌதீகத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது.

துறவு வாழ்க்கைஇரண்டாம் பட்சமே. வேறு எந்த மதமும் தாயாக - குழந்தையாக, கணவனாக - மனைவியாக கடவுள்களைக் கண்டதில்லை. இது இந்து மதத்திற்கே உரித்தான ஓர் சிறப்பு.

இந்து மதம் வெறும் சந்நியாசிகளுக்கும் வாழ்க்கையைக் கண்டு பயந்தவர்களுக்கும் மட்டுமே அடைக்கலம் கொடுப்பதல்ல. மனித வாழ்க்கையின் நாகரீகம் கலைகள் அனைத்தையுமே காலத்தோடொட்டி அது எதிரொலிக்கிறது.

வாழ்க்கையில் எத்தனை கோணங்கள் உண்டோ அத்தனை கோணங்களும் இந்து மதக் கொள்கைகளில் உண்டு. ஒவ்வொரு நோக்கத்திற்கும் ஒவ்வொரு கதைகள் உண்டு. ஒவ்வொரு வாழ்க்கைத் தேவைகளுக்கும் ஒவ்வொரு கடவுள்கள் உண்டு. மனிதர்களின் ஆசைகளுக்கும் இலட்சியங்களுக்கும் உல்லாசங்களுக்கும் இந்து மதம் வழிவகுத்திருக்கிறது. இதன் மூல நோக்கமே வாழ்க்கையின் சகல பகுதிகளையும் சுட்டிக் காட்டுவதுதான்.

ஒவ்வொரு அனுபவத்திலும் ஓடி வந்து நிற்பது இந்து மதக் கருத்துக்களே. இவை இன்றைய விஞ்ஞானத்தை - தனது மெய்ஞானத்தில் என்றோ உணர்த்தியிருக்கின்றன. சக்தியின் வடிவங்கள் யாவற்றையும் கடவுள்களாகக் கொண்டிருக்கிறது. காலாகாலமாக அது வளர்ந்து ஒவ்வொரு துறையிலும் புதிய புதிய தத்துவங்களைத் தோற்றியுள்ளது. ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு இந்துப் பண்டிகைக்கும் ஓர் அர்த்தம்இருக்கும்.

வாழ்க்கை என்பது அறிவும் பொருளும் நலனும்தானே!.... அதற்காகத்தான் கல்வி செல்வம் வீரம் என்பவற்றிற்கு மூன்று கடவுள்களை வகுத்திருக்கிறது. உள்ளத்தை மனத்தால் கவர்ந்து நோக்கும் போது தான் வாழ்க்கை ஒளி அடைகிறது. என்பதால் கலைக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றது. இப்படியே!..... பொதுவில் மனித வாழ்வின் குறிக்கோள் அனைத்தையும் இந்து மதமே பூர்த்தி செய்கின்றது.


மரணங்களையும் துன்பங்களையும் மனித குலத்திற்கு இறைவன் விலக்கியிருந்தால் அவன் என்றோ விலங்காக மாறியிருப்பான். பொதுவாக மனிதன் கடவுளை அறியபுகழ துடிக்கும் துடிப்புக்கெல்லாம் தனது துன்பங்களிலிருந்து விடுதலைக்காகவும் மரணங்களில் இருந்து மகத்துவம் பெறவும் அவன் துடிக்கும் துடிப்புக்களாகத்தான் ஒளிந்திருக்கின்றன. எப்பொழுதும் தன்னை உணர்ந்து விட்டால் மனிதன் மரணத்திலிருந்தும் துன்பங்களிலிருந்தும் விடுதலையாகிவிடுவான். அவன் இந்த மஹாசமுத்திரத்தின் ஓர் சிறு கரையில் தன் ஆன்மாவை நனைத்துவிட்டால் மரணமடைந்தாலும் இறந்தவனாக மாட்டான். இருட்டையும் வெளிச்சத்தையும் நீரையும் நெருப்பையும் வேறுபடுத்தாத அளவுக்கு எதிலும் சமநோக்கு உள்ளவனே மரணமற்ற நிலையை எய்துகிறான். இந்த யோக நிலையை எய்துகிறவன் இறந்தும் வாழ்கிறான்.

மானிட ஜாதி முழுவதும் இந்த பக்குவ நிலையை எய்திவிட்டால் உலகத்தில் உள்ள சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்து விடும். ஆஸ்தீக வாதமும் இருக்காது நாஸ்தீக வாதமும் இருக்காது. சோஷலிசமும் கம்யூனிசமும் முதலாளித்துவமும் எதுவுமே இருக்காது. முடிவில் இந்து தன்மை ஒன்றே நிலை பெற்று விடும். அதுதான் மனிதத் தன்மை. எமது சமயத்தை மிகவும் எளிமையுடனும், எழிலுடனும் உங்கள் முன் கொண்டு வரவே "சைவன்" வெளி வருகின்றான்.

**வி.எஸ் இரத்தினம்ஸ் சண்**
**நகையகம்**
*நவீன முறையில் நகைகளை பெற்றிட நாடவேண்டிய இடம்*
**பேரூந்துநிலையம்,**
**நெல்லியடி.**

**அம்மன் ஸ்ரோர்ஸ்**
*சகல விதமான பல சரக்கு பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்*
முருக மூர்த்தி வீதி,
நெல்லியடி.

# இந்துக்களின் விழாக்கள்



திரு.க.கிருஷ்ணகுமார்
ஆசிரியர்
யா/நெல்லியடி ம.ம.வி.
கரவெட்டி.

இந்துப் பண்பாடென்பது இம்மைக்கும் மறுமைக்குமான வாழ்வினை அதன் சகல பரிமாணங்களுடனும் தன்னுள் அடக்கியுள்ளது என்பதில் ஐயமில்லை. பண்பாடு என்பது குறித்தவோர் இனமோ, சமுதாயமோ தனது அறிவாலும் சிந்தனைத் திறத்தாலும் தனக்கென வகுத்துப் பேணிவரும் செயற்பாடே ஆகும். இதன் பரிமாணமாகச் சமய நெறி, தத்துவ நோக்கு, அழகியலுணர்வு, குறிக்கோள்கள் என்பனவும் வெளித் தோன்றுகின்றன. இவ் வகையில் அவர்களின் பண்டிகைகளும் விழாக்களும் முக்கியமானவை ஆகின்றன. விழாக்களின் மூலம் அவர்களின் தொன்மை, அறிவு, திறன், கலை, கலாச்சாரப் பண்புகள் அவற்றின் முதிர்ச்சி நிலை என்பன அறியப்படுகின்றது.

பழக்க வழக்கங்கள் மாறிக் கொண்டே வருகின்றன. சடங்குகள் மாறுகின்றன. மறைகின்றன. புதியசடங்குகள் இடம் பிடிக்கின்றன. எனினும் சில விழாக்களும், பண்டிகைகளும் நெடுங்காலமாக மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இவை மக்களிடம் நிலை பெற்று விட்டன. இவற்றுள் தைப் பொங்கல், மகாசிவராத்திரி, தமிழ் ஆண்டுப் பிறப்பு, சித்திரா பௌர்ணமி, -கிருஷ்ண ஜெயந்தி, விநாயக சதுர்த்தி, நவராத்திரி விழா, தீபாவளிப் பண்டிகை, கந்த சஷ்டி, கார்த்திகைத்தீபம், வைகுண்ட ஏகாதசி முதலியன குறிப்பிடத் துகந்தவை.

சில விழாக்களும், பண்டிகைகளும் தத்துவ ஞானிகளான முனிவர்களால் ஆக்கப்பட்டன. இவை புராணங்களுடனும், இதிகாசங்களுடனும் தொடர்புபட்டவை. சில விழாக்கள் இயற்கைச் சூழலுடன் இசைந்தவாறு தோன்றி வளர்ந்தவை. ஸ்தூல வாழ்விற்கு அனுகூலமான பண்டிகைகளும் உண்டு. சூட்சும வாழ்க்கைக்கும் ஆத்ம லட்சியங்களுக்கும் இசைந்து போகும் விரதங்களும் இவற்றில் உண்டு.

உதாரணமாக தைப் பொங்கலைப் பார்த்துக் கொள்ளலாம். "பொங்கும் மங்களம் எங்கும் தங்குக" என்னும் ஜீவநாதமான கருத்துக் கமைய உழவன் தனது வாழ்க்கைக்கு உதவி தனது வாழ்வையும் வயலையும் குளிரச் செய்து செல்வம் பொங்கச் செய்த சூரியனுக்கும் எருதுகளுக்கும் நன்றி தெரிவிக்கும் விழாவாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. தை பிறந்து தரை குளிர்ந்து தமிழ் மக்கள் உள்ளமும் குளிர்ந்து போகின்றது என்பதற்கு அடையாளமாக வீட்டைச் சுத்தமாக்கி அழகு படுத்தி புத்தரிசிப் பொங்கல் பொங்கி சூரியனுக்குப் படைத்து மகிழ்கின்றனர்.

இவ்வாறே சித்திரைப் புத்தாண்டு கொண்டாடப்படுகின்றது. சூரியன் மீன ராசியிலிருந்து மேட ராசிக்குப் பிரவேசிப்பது தமிழ் வருடப் பிறப்பாகும். இது சூரியன் ஒரு இராசி வட்டத்தை முடித்து பதிய வட்டத்தை ஆரம்பப்பதைக் குறிக்கின்றது. இவ்விழா வெப்பமான சித்திரை மாதத்தில் வருவதால் வெம்மையைத் தவிர்ப்பதற்கு உற்றார் உறவினருக்குக் குளிர் பானங்களை வழங்குவதும் எண்ணெய் தேய்த்து மருத்து நீர் வைத்து முழுகி புதிய ஆண்டில் பிரவேசம் செயயும் போது குளிர்ந்த உள்ள முடையோராகவும் பிறர் பணியும் விருப்படையோராயும் இருக்க வேண்டும் என்பதை இவ்விழாவின் புதை பொருளாகக் கருதலாம். அத்துடன் புத்தாண்டில் வேப்பம் பூபச்சடி செய்து உண்பதுவும் பழக்கமாக உள்ளது. இது மருத்து குணமுடைய பொருளாக இருப்பதுடன் வேப்பம் பூ இப்பருவ காலத்தின் சின்னமுமாகும். இதன்னை உபயோகிப்பது ஒரு புதிய பருவ காலத்திலும் ஆண்டிலும் நாம் பிரவேசிக்கின்றோம் என்பதற்கு நினைவுக் குறியுமாகும்

தீபாவளியும் இந்துக்களின் முக்கியமானதொரு விழாவாகும். தீபாவளியன்று கண்ணபிரான் உலகத்தை நரகமாக்கி வந்த நரகாசுரனை வதஞ்செய்தான் என்பது பாகவதக் கதை. அந்த அசுரன் சாகும் போது சிறது ஞானம் பெற்றவனாய் "என் மரணத்திற்காக கண்ணீர் வடிக்க வேண்டாம். புத்தாடைகள் அணிந்து. இனிப்புப் பண்டங்கள் உண்டு மகிழ்ச்சியாகக் கொண்டாடுங்கள்" என வரம் கேட்டான். இதன் பொருள் கொடுமைகள் அழிந்து நன்மைகள் பெருக வேண்டும் என்பதாகும். இதனைப் புத்தாடைகளும் ஆபரணங்களும் அணிந்து கொண்டு நரகாசுர வதத்திற்கு அறிகுறியாக வெடி மத்தாப்பூக்களைக் கொழுத்தி விளையாடும் குழந்தைகளின் முகத்தை மத்தாப்பூ வெளிச்சத்தில் கண்டு தாய்க்கும் தந்தைக்கும் கவலை பறந்து விடுகின்றது. துன்பச்சுமை நிறைந்த காரிருள் நீங்கி இன்ப ஒளி பரவவேண்டும் என்பதற்காக அகல் விளக்குகளை ஏற்றி இனிப்புப்பண்டங்களை உண்டு உறவினருடன் கூடி விருந்துண்டு மகிழ்கின்றனர். இதன்மூலம் தமது கூடி விருந்துண்ணும் பாரம்பரியத்தையும் வளர்த்துக் கொள்கின்றனர்.

இவ்வாறே நவராத்திரி விரதமும் பெருவிழாவாகக் கொண்டாடப் படுகின்றது. இந்துக்கள் சரஸ்வதி, துர்க்கை, திருமகள் ஆகிய மூன்று பெண் தெய்வங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். ஆண் தெய்வங்களுக்கு சரிசமமாக அவர்களின் சக்தியாக போற்றுகின்றனர். இதனை எடுத்துக் காட்டுவதற்கு நவராத்திரி விரதம் பயன்படுத்தப்படுகின்றது. இவ் விழாவின் பிரதான நோக்கம் சக்தி வழிபாடேயாகும். இந்துக்களின் ஒவ்வொரு விழாவும் புராணக் கதைகளுடன் தொடர்புபட்டது. அவ்வாறே நவராத்திரியும் துர்க்கை வடிவில் சக்தியானவள் எருமை வடிவம் கொண்ட மகிஷாசுரனை வதஞ்செய்வதற்கு அறிகுறியாக நிகழும் கொண்டாட்டமே நவராத்திரி என்பது தேவி புராணத்தின் கருத்தாகும். இதனை விளக்குவதற்கே விஜயதசமியாகிய பத்தாம் நாள் வாழை வெட்டு நடத்தப்படுகின்றது. அத்துடன் கொலு வைத்தல். கலை விழாக் கொண்டாடுதல் வித்தியாரம்பம் செய்தல் என்பனவும் விஜய தசமியில் செய்து வருவது இந்துக்களின் வழக்கமாகும்.

இந்துக்களின் பிறிதொரு விரதமும் விழாவுமாக கந்த சஷ்டி விளங்குகின்றது. கந்தபுராணக் கலாச்சாரம் கடைப்பிடிக்கப்படுவதாக ஈழ நாட்டில் இவ்விரதம் சிறப்புப் பெற்றுள்ளது. இதுவும் கந்த புராணத்துடன் தொடர்புபட்டதாகும். முருகவேள் சூரபத்மனை அழித்து உலகிற்கு அருள் புரிந்த நன்னாளாக கருதப்படுகின்றது. ஐப்பசி மாதம் கந்த சஷ்டி விரதமிருந்து முருகனைத் துதிப்பது விசேஷ நற்பலனைத் தரும் என்பது முருக பக்தர்களின் நம்பிக்கை.

இவ்வாறே விநாயக சதுர்த்தி, கிருஷ்ண ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி போன்றனவும் கொண்டாடப்படுகின்றன. நவீன வாழ்க்கை முறையில் மனித வாழ்வு இயந்திரத் தன்மை நிறைந்ததாகவும் அமைதியின்மையுடையதாகவும் மாறி வருகின்றது. இதனால் நேரப் பற்றாக் குறை எமது கலை கலாச்சாரப் பண்புகளையும் பண்பாட்டம்சங்களையும் மாற்றி வருகின்றது. இதனால் சில விழாக்களே இன்று எல்லோராலும் கொண்டாடப்படுபவையாகவும் மாறி வருகின்றது. எனினும் விழாக்களும் அவற்றைக் கொண்டாடும் கலாச்சார பண்பாட்டு அம்சங்களையும் அவற்றின் தொன்மையையும் சிந்திக்க வைப்பதுடன் உளநல சிகிச்சையாகவும் அமைகின்றது. விழாக்களில் கூடமனிதனை ஒழுக்க சீலன் ஆக்குவது இந்த மதமே! இவையைத் தெளிவுபடுத்தவே ''சைவன்'' வருகிறான்.

# ஈழத்து இந்து மத வரலாறு




***திருமதி சிவமங்கை சுரேஷ்***

ஆசிரியை

யா/நெல்லியடி ம.ம.வி.

கரவெட்டி.


இந்து மதம் சனாதன தர்மம், வைதிக மதம் என்றெல்லாம் சிறப்புப் பெற்ற விளங்குகின்றது. இந்து மதம் எக்காலத்தில் தோற்றம் பெற்றது? யாரால் தோற்றவிக்கப்பட்டது? எவ்விடத்தில் தோற்றம் பெற்றது? என்று வரையறை செய்து கூறமுடியாதளவிற்கு சிறப்புப் பெற்று விளங்குகின்றது. இவ்வாறு விளங்குகின்ற இந்து மதத்தை ஈழம் எப்போது ஏற்றுக் கொண்டது? அதன் காலம் என்ன? அக் காலத்தில் எவ்வாறு இந்து மதம் பேணப்பட்டது? அதன் வளர்ச்சி நிலை எத்தகையது? என்பன பற்றிய விபரங்களை இக்கட்டுரையில் எடுத்து நோக்குவோம்.

முதலில் ஈழத்து இந்து மத வரலாற்றை அறிந்து கொள்வதற்கு வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள்மற்றும் ஈழத்து வரலாற்று இலக்கியங்களான மகா வம்சம், தீபவம்சம், செகராஜசேகரம், பரராஜசேகரம், ஆலவம்சம், யாழ்ப்பாண வைபவமாலை என்பனவும், இவற்றை விட பரணவிதான என்பவரது ஆய்வுகள், அரச கட்டிடங்கள், கோயிற் கட்டிடங்கள் அதன் அழிபாடுகள், தென்னாட்டில் சமய வளர்ச்சிக்குச் சாதனமாக அமைந்த நாயன்மார்கள் பாடல் கூற்றுக்களையும் ஆதாரங்களாகக் கொள்ளலாம்.

இத்தகைய ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இந்து மதம் பற்றிய நிகழ்வுகளைக் கூற முயல்கின்ற நாம் ஆண்டு ரீதியாக வகுக்காது சமய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு வகுத்து ஆராய முடியும்.

இவ் வகையில் முதலில் ஈழத்தில் தொன்மைக் காலத்தில் நிலவியஇந்து மதம் பற்றி எடுத்து நோக்குவோம். அவ் வகையில் இராமாயணத்தை, ஈழத்தில் பண்டைய காலத்தில் நிலவிய இந்து மதம் பற்றி அறிந்து கொள்வதற்கான சான்றாகக் குறிப்பிடலாம். அதாவது இலங்கையை ஆண்ட இராவணன் சிறந்த சிவ பக்தன் என்றும்அவன்தான் செலலுமிடமெல்லாம் சிவலிங்கத்தை எடுத்துச் சென்றான் என்றும்

கூறப்படுகிறது. இராவணனின் தாயாரும் திருக்கோணேச்சரப் பெருமான் மீது பக்தி கொண்டு தினமும் அவரை வழிபட்டு வந்தார் என்றும் கூறப்படுகிறது. இராவணனின் மனைவியான மண்டோதரி மாதோட்டத்தில் வாழ்ந்த மயனின் மகள் என்றும் அவள் கேதீச்சரப் பெருமான் மீது தீவிர பக்தி கொண்டிருந்தாள் என்றும் கூறப்படுகின்றது. இவை தவிர இன்று வரை ஈழத்தில் அழியாச் சான்றுகளாக காணப்படும் இராவணன் கல்வெட்டு, கன்னியா வெந்நீரூற்று,இராவணன் குகை, சீத்தா எலிய என்பனவற்றையும் குறிப்பிடலாம்.

இது மட்டுமன்றி சீதையை மீட்டுச் செல்வதற்கு அனுமானின் துணையுடன் வந்த இராமன் இராவணனுடன் ஈழத்தில் போர் புரிந்ததாகவும் அப் போரில் இராவணன் மாண்டதாகவும் அவ்வாறு இராவணனை அழித்த பாவததைப் போக்குவதற்குச் சிறப்பு மிக்க ஈஸ்வரங்கள் இராமனால் தரிசிக்கப்பட்டு அதற்கு இலிங்கங்களும் வழங்கப்பட்டு இருந்தது எனவும் இராமாயணம் கூறுகிறது. மற்றும் இந்தியாவுக்கு மீள சீதையுடன் இராமன் திரும்பிச் செல்லும் போது தனது ஞாபகார்த்தமாக ஒரு ஸ்தலத்தை குறிப் பிட்டுச் சென்றான் என இராமாயணம் குறிப்பிடுகிறது. அவ்வாறாகக் குறிப்பிடப்பட்ட தலம் இராமேஸ்வரமாக இருக்கலாம் என பிற்காலத்தவர்கள் கருத்தத் தெரிவிக்கினறனர்.

எவ்வாறு இருப்பினும் இராமாயண கதைக்கும் ஈழத்திற்குமிடையே நெருக்கமான ஒரு தொடர்பை நாம் காணலாம். இவ்வகையில் இராமாயணக் கதையை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது ஈழத்தில் இந்து மதமானது மிகவும் தொன்மையான காலத்தில் இருந்தே நிலவி வந்தமையை அறியலாம்.

அடுத்து பாரதத்தை எடுத்து நோக்கின் அருச்சுனன் தல யாத்திரை மேற் கொண்டு வட நாட்டில்இருந்து தென்னாட்டிற்கு வந்தான் என்றும் அவ்வாறு வந்த போது ஈழத்தில் திருக்கேதீச்சர ஆலயத்தை இவன் தரிசித்தான் என்றும் கூறுகின்றது. இதனால் பாரத காலத்திலும் ஈழத்தில் ஆலயங்கள் சிறப்புப் பெற்றிருக்க வேண்டுமெனக் கருதலாம்.

இவ்வாறாக ஈழத்தில் இந்து மதம் மிகத் தொன்மையான காலத்தில் இருந்து நிலவி வந்ததோடு மட்டுமல்லாது ஈழத்தின் பூர்வீக மதமாகவும் விளங்குகின்றது. இதற்கு ஆதாரங்களாக மகா வம்சம், தீபவம்சம், யாழ்ப்பாண வைபவ மாலை என்பனவற்றில் உ ள்ள குறிப்புக்கள் விளங்குகின்றன. இம்

மூன்று நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு கருத்துக்களைக் கூறியவரலாற்று ஆசிரியர்கள் பௌத்தச் சார்புடைய வரலாற்று நூல்களில் இந்து மதத்தின் தொன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாவிடினும் தற்செயலாகக் கூறப்பட்ட சில சான்றுகளை எடுத்து நிரூபித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதாவது மகாவம்சக் குறிப்பில் இந்திய மக்களது வரலாற்று நிகழ்வுகளைக் கோவைப்படுத்திக் கூறுகின்ற போது ஈழத்தில் ஆதி காலத்தில் குடியிருந்த மக்கள் யாவர்? என்ற விளக்கத்தை அறிகின்ற பொழுது இயக்கர்கள், நாகர்கள், வேடர்கள் ஆகியோரே ஆதிக்குடியினர் என்றும் அவர்களது உணவு, உடை, அவர்களால் பேணப்பட்ட பழக்க வழக்கங்கள் என்பவற்றைக் கூறும் போது அவர்களது வழிபாடு பற்றியும் கூறப்பட்டிருந்தது. அவ்வகையில் அக்கால வழிபாடுகளாக இலிங்க வழிபாடு, நாகவழிபாடு, இயற்கைத் தெய்வ வழிபாடு என்பன நிலவியதாகக் கூறப்படுகிறது. பிற்பட்ட ஆய்வாளர்கள் அந்தக் கருத்தை உறுதிப்படுத்தி ஈழத்தில் ஆதிகுடிகளாகிய இயக்கர்களும், நாகர்களும், வேடர்களும் மேலே சொல்லப்பட்ட வணக்க தெய்வங்களைப் பேணினர் என்றால் இந்த வணக்கத் தெய்வங்கள் தற்காலத்தில் இந்து மதத்தவர்களால் பேணப்பட்டு வருவதால் ஈழத்தின் பூர்வீகக் குடிகளால் பேணப்பட்ட மதம் இந்து மதமாக இருக்கலாம் எனக கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் சிந்தனை எனும் சிறப்பு இதழில் பேராசிரியர் சிற்றம்பலம் அவர்கள் "ஆதி இந்துமதம்" என்னும் தலைப்பில் வழங்கிய கருத்துக்கள், பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்கள் "ஆதி ஈழத்தில் இந்து மதத்தின நிலைப்பாடு" என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையிலும் மகாவம்சக் குறிப்புக்கு ஆதாரம் கிடைக்கப் பெற்றமையைக் குறிப்பிடலாம். ஆகவே மகாவம்சம் கூறும் பூர்வீகத் தொன்மை ஈழத்தின் இந்து மதத்திற்குரியது ஆகும்.

இது மட்டுமன்றி யாழ்ப்பாண வரலாற்றைச் சிறப்புப்படுத்தும் யாழ்ப்பாண வைபவமாலை என்னும் இலக்கியம் விஜயன் இலங்கைக்கு வருகை தருவதற்கு முன் ஈழத்தின் நிலைப்பாட்டினைப்பற்றி சில குறிப்புக்களைக் கூறியுள்ளது. அதன் கருத்துப்படி நோக்குகின்ற போது கி.மு. 5ம் நூற்றாண்டுக்கு முன்னரே இலங்கை ஆலயங்களை நிறைவாகக் கொண்ட ஒரு நாடாக விளங்கியது என்பதைப் பல இடங்களில் தெளிவாகக் கூறியுள்ளது.

மற்றும் விஜயன் இலங்கைக்கு வருகை தந்த போது இலங்கை சனத்தொகை அற்ற பிரதேசமாக விளங்கியது என்றும் இப் பிரதேசத்தில்

ஆட்சியை ஏற்க வந்த விஜயன் அரசுக்குப் பாதுகாப்பாக ஆலயங்களை சுற்றுப் புறங்களில் அமைத்தான் என்றும் கூறப்பட்டிருந்தது. இந்த வகையில் கிழக்குப்புறப் பாதுகாப்புக்கு சந்திரேஸ்வரர் ஆலயமும் இவனால் அமைக்கப்பட்டது எனக் கூறப்பட்டாலும் இவ்வாலயப் பெயர்களை இந்த இடங்களில் இன்று நாம் காணவில்லை. எனினும் அவை அழியக்கூடிய பொருட்களைக் கொண்டு கட்டப்பட்டுக் காலப் போக்கில் அவை அழிவடைந்திருக்கலாம் என்று பிற்கால ஆசிரியர்கள் உறுதி செய்கின்றனர்.. இதனால் விஜயனது வருகைக்குப் பின் இந்து மதம் மேலும் செழிப்புப் பெற்று விளங்கியது எனலாம்.

மகாவம்சம் கூறும் மற்றொரு கருத்தை நோக்குகின்ற போது அதாவது விஜயன் இலங்கக்கு வருகை தந்த போது விஜயனுடன் கூட "உபதிஷ" என்னும் பெயரையுடைய பிராமணன் ஒருவன் இலங்கைக்கு வருகை தந்தான் எனவும் அவ்வாறு வந்த பிராமணன் இலங்கையில் புராணத் தொன்மை மிக்க திருத்தலங்களைத் தரிசித்தான் என்றும் இதில் திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டரேஸ்வரம் என்பன கூறப்பட்டு இருந்ததாகவும் மேலே சொல்லப்பட்ட இத் தலங்களில் தொண்டரேஸ்வரம் தவிர்ந்த ஏனைய தலங்கள் இன்று வரை அதே நாமங்களுடன் இணங்கி வருவதால் விஜயன் வருகைக் காலத்தில் இத் தலங்களும் இருந்திருக்க வேண்டும் என்பதை உறுதிபடுத்த முடிகின்றது.

ஆய்வாளர்கள்கூறும் ஆதாரங்களை விட கிரேக்க ஞானிகளான "டொலமி", "பிளினி" போன்றவர்களும் ஈழத்தின் பூர்வீக மதம் எனச் சில சான்றுகளைத் தந்துள்ளார்கள். எனவே ஈழத்தின் பூர்வீக மதம் இந்து மதமே என நாம் கூறலாம்.

அடுத்து ஈழத்தின் இந்து மதம் தொன்மைக் காலத்தில் இருந்தே தனித்துவம் மிக்க ஓர் மதம் என்பதனை ஆதாரத்துடன் நிருபிக்க எமக்குக் கிடைத்த ஆதாரங்கள் ஆராய்ச்சியாளராகிய பரணவிதானவினால் மீட்கப்பட்ட புதை பொருள் சான்றுகளும் பண்டைய காலத்தில் மன்னர்கள் ஆட்சியில் எழுதப்பட்ட கற்சாசனங்களும் அச்சாசனங்களைத் தமிழ்ப்படுத்தியும் விரிவுபடுத்தியும் தந்த பேராசிரியர்களின் கட்டுரைகளும் உறுதிப்படுத்துகின்றன.

அதாவது ஈழத்தின் பிரதானமான பிரதேசப் பரப்புக்கள் அகழ்வுக்கு உட்படுத்தப்பட்ட போது அகழ்வுச் சான்றுகள் எனும் நிலையில் பல

மதங்களுடன் சார்பான அகழ்வுகளைத் தரம் பிரித்து அதன் காலவரையறையை வகுத்த புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் இச் சான்றுகளில் மிகவும் பழமை மிக்கதான சான்றுகள் இந்து மதச் சார்புடையதாகக் காணப்பட்டமையால் ஈழத்தில் ஏனைய மதங்கள் இந்து மதத்திற்கு பிற்பட்ட காலத்தில் ஈழத்திற்கு வருகைதந்திருக்க வேண்டும் என உறுதிபடுத்திச் சான்றுகள் காணப்படுகின்றன என புதைபொருள் ஆராய்ச்சிததுறைத் தலைவராக விளங்கிய பரணவிதான கருத்துத் தெரிவித்தள்ளார்.

அது மட்டுமல்லாது பௌத்த மதத்தின் வருகையும் ஈழத்தின் இந்து மதத்தின் தொன்மைக்குத் தரும் சிறந்த சான்றாக அமைகின்றது. கி.மு. 5ம் நூற்றாண்டு காலப்பகுதியில் சிறப்புற்று விளங்கிய இந்து மதம் ஈழத்தில் பௌத்த மதத்தின் தாக்கத்தை கி.மு.2ம் நூற்றாண்டில் பெற்ற கருத்தை நாம் நிறுவக் கூடிய சான்றாகக் கல்வெட்டுச் சான்றுகளைக் குறிப்பிடலாம் குறிப்பாக பௌத்தத்தைப் பரப்பிய மன்னனான அசோகனது கல்வெட்டும் ஈழத்திற்கு வருகை தந்த பொழுது ஈழத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த தேவநம்பியதீசன் கல்வெட்டும் அறைகுறையான சான்றுகளை எமக்க வழங்கி இருப்பினும் பிற்கால வரலாற்று ஆசிரியாகள் அதற்க உயிர் கொடுத்து பௌத்த மத வருகைச் சம்பவங்களைத் தெளிவுபடுத்தியிருத்தலையும் நோக்கக் கூடியதாக உள்ளது. இவ் வகையில் ''பௌத்தமும் தமிழும்'' எனும் நூலையும் வெளிப்படுத்திய "மையிலை சீனி வேங்கடசுவாமி'' அவர்களின் "பௌத்தம் பற்றிய வரலாறு '' என்ற தலைப்பில் வெளிப்படுத்திய கட்டுரையில் அசோகன் காலத்திற்குரியதான கின்னார் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றினை ஆதாரப்படுத்திக் கூறுகின்றார். அதாவது "அறவிஜயம்'' என்னும் பெயரில் அறங்கூர்ந்த மன்னனாகிய அசோகன் தன்மைய நாட்டிலும் தன்னுடைய நாட்டிற்கு 600 ஜோஜனை தூரத்தில் உள்ள 6 ஜவன மன்னர்கள் பிரதேசத்திலும் இப்பால் சேர, சோழ பாண்டிய நாடுகளிலும் தம்பரா பரணியிலும் பௌத்த மதத்தைப் பரப்பினான் என்று எழுதப்பட்டமையால் இந்து மதத்தில் இருந்து பௌத்த மதத்திற்கு மாறிய அசோகன் அரசியல் மதமாக பௌத்த மதத்தை மாற்றியதுடன் தனது பிள்ளைகளை பௌத்த மதத்திற்கு சேவையாற்றுவதற்கு பணித்து பௌத்த மதத்தை பரப்புவதையே முழுநோக்காகக் கொண்டிருந்தான் என்பதை உறுதிப்படுத்தி அசோகனது ஏற்பாட்டின் பெயரிலேயே பௌத்த மதம் இலங்கைக்கு வந்தது என்பதை உறுதிப்படுத்துகிறார்.

எனவே மேற் கூறப்பட்ட விடயங்களைத் தொகுத்து நோக்குகின்ற போது ஆதி காலத்தில் ஈழத்தில் இந்து மதம் எவ்வாறு நிலவியிருந்தது என்பதை ஆதாரங்களின் வாயிலாக நாம் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது எனலாம். இதன் படி உலகின் முதல் மதமும் இந்து மதமே என்பதை விளக்கவே ''சைவன்'' வருகிறான்.

# இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க



**திருமதி ம.உதயகுமாரன்**
ஆசிரியை
யா/நெல்லியடி ம.ம.வி.
கரவெட்டி.

பிரபஞ்சத்திலுள்ள பிறப்புக்களில் மனிதப் பிறப்பு மகத்துவமானது மனிதனால் சாதிக்க முடியாதது என உலகத்தில் ஒன்றுமே இருக்க முடியாது. மனிதத்துள் மகத்துவமான சக்தி புதைந்து உள்ளது. அதனை வெளிக் கொணர்வது ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும். இதனால் தமது குடும்பமும், சமுதாயமும், நாடும் பயன்பெறும் என்பது கண்கூடு.

"நம்பிக்கையே மனிதனது சாதனம்" என்று சொல்லுவார்கள். தன்னம்பிக்கை மனிதனது உயர்ச்சிக்கு அச்சாணியாக விளங்குகின்றது. மனத் துணிவுடன் எந்தக் காரியத்தை செய்தாலும் அது வெற்றி பெறும். ஒரு செயலை செய்ய முன்னர் அதனைச் செய்தால் என்ன விளைவு வருமோ? என அச்சப்பட்டு அக் காரியத்தை செய்யாது விட்டால் அதன் பலன் ஒருவருக்கும் கிட்டாது.எனவே தானும் சமுதாயமும் மகிழ்ச்சியாக இருக்க மனத்துணிவுடன் காரியங்களைச் செய்ய வேண்டும். இங்கு மனப் பாங்கு என்பது குறிப்பிடத்தக்கது. அறிவு, திறன் தமக்கு மாத்திரமன்றி மற்றவர்களுடைய வளர்ச்சிக்கு உதவக்கூடிய மனப் பாங்கை பெற்றிருந்தால் எல்லோரும் இன்பமாக வாழக்கூடிய சூழல் உருவாகும். "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற மகுட வாசகம் எல்லோருடைய மனதிலும் பதிய வேண்டும். இதற்கு மாறாக தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்றிருந்தால் அங்கு சுயநலம்தான் தலை தூக்கும். எனவே பிறர் மீது அக்கறை கொள்வதனால்தான் இன்பமாக எல்லோரும் வாழ முடிகிறது.

தன்னுயிர் போல மன்னுயிரையும் நேசிக்க வேண்டும். இரக்கம், கருணை,விட்டுக் கொடுத்தல், சகிப்புத் தன்மை, சுறுசுறுப்பு, கடமையைச் சரிவரச் செய்தல்,புரிந்துணர்வு, நெகிழ்வுத் தன்மை போன்ற இன்னோரன்ன பண்புகளால் மனிதன் தானும் தன்னைச் சுற்றியுள்ள பிற உயிர்களையும் சந்தோஷமாக வைத்திருக்க முடியும். இறைவன் படைப்புக்களில் ஏற்றத்

தாழ்வுகள் இல்லை, இந்தப் பாகுபாட்டை ஏற்படுத்துபவன் மனிதன்தான். இதனால் சமுதாயத்திற்குப் பிரச்சினைகள் தலையெடுக்கிறது. இன்ப வாழ்க்கைக்கு முட்டக் கட்டையாக அமைகின்றது.

அறியாமை என்ற இருளைப் போக்கி அறிவு என்ற ஒளியைத் தருவது கல்வி அறிவாகும். **ஒவ்வொருவரும் கல்வியைப் பெற்றிருத்தல் வேண்டும். கற்றால் மட்டும் போதாது அதன்படி ஒழுக வேண்டும். படிப்பது தேவாரம், இடிப்பது சிவன் கோவிலாக இருக்கக் கூடாது.** ஒவ்வொருவரும் கற்றதன்படி ஒழுகினால் சமுதாயத்தின் பிரச்சனைகள் உருவாகாது. ''கெடுவான் கேடு நினைப்பான்'' எனும் ஆன்றோர் வாக்கிற்கிணங்க தாம் இழிநிலையடையப் போகிறவர்கள்தான் மற்றவர்களுக்கு துன்பத்தைச் செய்வார்கள். எனவே கற்றதன்படி ஒழுகி எல்லோரும் இன்பமாக வாழ உழைக்க வேண்டும்.

நாம் இவ்வுலகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு பொருள் இன்றியமையாதது. அதனைநேர்மையான முறையில் உழைத்துப் பெற வேண்டும். பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே'' என்பதற்கிணங்க உழைக்கக் கூடியவலு இருந்தும் உழைக்காமல்களவெடுத்துப் பொய் சொல்லி, மற்றவர்களைச் சுரண்டி, பிறர் உழைப்பை உறிஞ்சி உண்ணுபவர்களுடைய வாழ்க்கை நாளடைவில் துன்ப நிலைக்கு இட்டுச் செல்லும். உழைத்து வாழ்பவன் இன்பமாக வாழ்கிறான். மற்றவர்களுக்கும் அதன் பயன் சென்றடைகிறது. "பாத்திரம் அறிந்து பிச்சை கொடு கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு என்பதற்கிணங்க உதவி தேவைப்படுபவர்களுக்கு எம்மாலான உதவியைச் செய்து வாழ்ந்தால் எல்லோரும் இன்பமாக வாழலாம்..

அன்பாக இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம்.ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டால் அங்கு எல்லாச் செல்வங்களும் இருந்தாலும் அன்பு இல்லாவிட்டால் அங்கு வெறுமையான போலி வாழ்க்கைதான் மிஞ்சும்.அன்பு என்பது பசை போன்றது.பசை எவ்வாறு ஒட்டிப் பிடிக்குமோ அதேமாதிரி அன்பும் மற்றவர்களை கவர்ந்திழுக்கக்கூடியது. எல்லோருடனும் அன்பாக இருக்கிறவர்களுக்கு பகை ஏது? குரோதங்கள் ஏது? என்றுமே அவர் மகிழ்ச்சியாக இருப்பார். மற்றவர்களையும் மகிழ்ச்சியாக இருக்க வைப்பார். எனவே எல்லோரும் இன்பமாக இருப்பதற்கு அன்பு அடிநாதமாக விளங்குகின்றது.

உலக வாழ்க்கை நிலையற்றது என்ற உண்மை எம்மன உணர்வில் இருக்க வேண்டும்.இவ்வாறு இருப்பதனால் மற்றவர்களுக்கு கேடு செய்ய

விளைய மாட்டோம். நிலையாமையை இந்து சமயம் உணர்த்துகிறது. சிவசின்னங்களில் ஒன்றான விபூதியை அணிவதன் நோக்கமே இதுதான். நாம் இறுதியில் ஒரு பிடி சாம்பல் ஆவோம் என்பதனை உணர்த்துவதற்காகவே விபூதியைப் பூசுகின்றோம். ஒவ்வொருவரும் நிலையாமைக் கருத்தை உணர்ந்து நடப்பாராகில் என்றுமே இன்பமாக வாழலாம்.

மனிதனை மனிதன் மதித்து வாழப் பழக வேண்டும். மதிப்பைக் கொடுத்துத்தான் மதிப்பைப் பெற வேண்டும். ஒருவருடைய குணத்தை அறிய வேண்டும் என்றால் அவருக்குப் பதவியைக் கொடுத்துப் பார்க்க வேண்டும் என்று சொல்வார்கள். என்னதான் பட்டம் பதவிஇருந்தாலும் மற்றவர்களை புரிந்துணர்ந்து மனிதர்களை மனிதர்களாக மதித்து அவர்களுடைய கருத்துக்களை செவிமடுத்து செயற்படுகிறவர்களுக்கு பிரச்சினைகள் வராது. வாழ்க்கை இன்பமாகத்தான் இருக்கும். இதற்கு மாறாக நான்தான் தலைவன்.நான் சொன்னபடிதான் நடக்க வேண்டும்,நான் போட்டதுதான் சட்டம் என்ற நெகிழ்ச்சியற்ற போக்கு இருக்குமானால் குடும்பமோ,நிறுவனமோ,நாடோ குட்டிச் சுவராகி சீரழிந்து போய்விடும்..

எனவே நாம் ஒவ்வொருவரும் அறிவு என்ற ஒளியைப் பெற்று அறியாமை இருளைப் போக்கி நாமும் நம்மைச் சார்ந்தோரையும் இன்பமாக வாழ சிந்தனை செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். “ஊரென்றும் வாழ கேடு ஒன்றும் இல்லை” என்ற சொல்வர்கள். எல்லோரும் சிறப்பாக வாழ்ந்தால் அங்கு இன்பம்தான் மையம் கொள்ளும். இன்ப ஊற்று பெருக்கெடுக்கும். அதன் பயனை எல்லாரும் அனுபவிப்பார்கள். இன்பம்தான் இந்து மதம். இந்து மதம்தான் இன்பம. வாழ்க்கை வாழ்வதற்கே என்பதை தெளிவுபடுத்தவே “சைவன்” வெளிவருகிறான்.


**மாயவன் (வினோதினி)**
**நகை மாடம்**

உங்கள் எண்ணம் போல்
தெரிவுகளுக்கு

மத்திய மகாவித்தியாலயவீதி,
நெல்லியடி.

**சந்துஜன்**
**அழகு சோலை**

*சகல விதமான அழகுசாதனப்*
*பொருட்களைப் பெற்றிட*

*மத்திய மகாவித்தியாலயவீதி,*
*நெல்லியடி.*

# சிவதீட்சை



**கி.யோகேந்திரன்**
தரம்: 13
நெல்லியடி ம.ம.வி.
கரவெட்டி.

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பது நம் ஔவைப்பிராட்டியின் அருள் வாக்கு. இந்த உடம்பை எடுத்த பயனை நாம் இம்மையிலே எய்துவதற்கு வாய்ப்பு அளிப்பது மனிதப் பிறப்பு ஒன்றேயாகும். இந்த அரிய வாய்ப்பினை நம்மில் எத்தனை பேர் பயன்படுத்திக் கொள்கின்றனர்? பெரும்பாலானோர் உண்டு உடுத்து வாழ்வதையே நோக்கமாகக் கொண்டு முயற்சி செய்கின்றனர். அவர்களின் மனமோ உலகியல் விடயங்களில் ஓயாது அழுந்தி அலை மோதிய வண்ணம் இருக்கும். அதனைத் தடுத்து ஒரு சில கணமேனும் நிறுத்தி வைப்பது எளிதான காரியம் அன்று. ஆயினும் அதற்கு வழி உண்டு. அலையும் மனத்தை ஒரு நிலைப்படுத்த உதவுவது இறைவனைப் பற்றிய தியானமாகும். தியானஞ் செய்வதற்கு உபகாரமாயிருப்பது மந்திரம். மந்திரம் என்பதற்குத் தெய்வத்தை அழைப்பது என்பது பொதுவான கருத்து.

சிவபெருமானை தியானித்து விதிப்படி வழிபடுவதற்கு நமக்குத் தகுதியளிப்பது சிவதீட்சை. சாதகரின் மனப்பக்குவத்திற்கும் தேவைகளுக்கும் ஏற்றவாறு தீட்சைகள் பல வகைப்படும். அவற்றையெல்லாம் ஆகம நூல்கள் விரிவாகக் கூறும். தீஷா என்னும் சொல் "ஞானத்தை கொடுத்து மலத்தைக் கெடுப்பது" எனும் பொருளுடையது என ஆகம நூல்கள் விளக்கம் தருகின்றன. இச் சொல்லில் தீ (கொடு) என்னும் மற்றைவினைப்படி கொடுத்தலை குறிக்கினறது. ஷா (அழி) என்னும் வினைப்படி அழித்தலைக் குறிக்கின்றது. ஞானமாகிய நற்பேற்றை அளித்து மும் மலங்களை அழிப்பது ஆதலினால் இது "தீஷா" எனப்பட்டது.

தீட்சைவகைகளாக சாதாரண (ஸ+ஆதார=ஆதாரமுடைய) தீட்சை என்றும் நிராதார (நிர்+ஆதார=ஆதாரமில்லாத) தீட்சை என்றும் இருவகைப்படும். பரமசிவன் விஞ்ஞான கலருக்கும் பிரளயாகலருக்கும் முத்தியருளும் முறை "நிராதர தீட்சை" எனப்படும். ஆணவம், கன்மம்,

மாயை ஆகிய மும் மலங்களுமுள்ள நம் போன்ற சகலர்க்கும் அளிக்கும் தீட்சை சாதார தீட்சையாகும். சகலருட் பக்குவ நிலை அடைந்தவர்க்குச் சிவபெருமான் மானிடச் சாந்தி (அதாவது மானிட உடம்பு எடுத்து) ஊரும் பேரும் உறவும் கொண்டெழுந்தருளி, அருள் நோக்கம் செய்தலாகிய நயன தீட்சையும், கையால் தீண்டுதலாகிய பரிச தீட்சையும், சொற்களால் உபதேசிப்பதாகிய வாசக தீட்சையும் செய்வான் என்று நூல்கள் கூறும். ஞானாசிரியர் திரு நோக்கினால் மாணாக்கனது பாசத்தைச் சேதிக்கும் (அழிக்கும்) தீட்சைக்கு சாம்பவ தீட்சை என்னும் பெயரும் உண்டு. சாதார தீட்சையில் மேற் சொன்ன மூன்றும் தவிர, மானச தீட்சை, சாத்திர தீட்சை, யோக தீட்சை, ஔத்திரி தீட்சை எனமேலும் நான்கு வகைத் தீட்சைகளும் நூல்களிலே கூறப்பட்டிருக்கின்றன. ஔத்திரி தீட்சையானது ஞானவதி, கிரியாவதி என இரண்டு வகைப்படும். அன்னம் இந்த ஔத்திரி தீட்சை சபீச (ஸ+பீஜ) தீட்சை என்றும் நிர்ப்பீச (நீர்+பீஜ) தீட்சை என்றும் இரு வகைப்படும்.

சைவமக்கள் தமது சமய ஆசாரங்களை அனுட்டிப்பதற்கு அவர்களுக்குத் தீட்சை அளிக்கும் ஆசாரியார் எத்தகையராய் இருத்தல் வேண்டும் என்பதை பார்த்தால் அவர் சமயதீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசாரியாபிடேகம் என்னும் இரண்டினோடு ஞான பூசையும் அனுட்டிப்பார். நிர்வாண தீட்சிகர் குருவாவதற்கு அதிகாரம் பெறும் பொருட்டுச் செய்து கொள்ளும் வினை முறையே “ஆசாரிய அபிடேகம்” எனப்படும். இவ்வாறு ஆசாரியபிஷேகம் பெற்றுக் கொண்டவரே பிறருக்குத் தீட்சை அளிக்கத் தகுதியுடையவராவார். இன்னும் தீட்சை அளிக்கும் ஆசாரியருக்கு இருக்க வேண்டிய வேறு தகமைகளையும் ஆகமங்கள் கூறுகின்றன. அவர் மனக்குற்றமும் உடற் குற்றமும் இல்லாதவராயும், கல்வி அறிவு, ஒழுக்கம் நிரம்பப் பெற்றவராயும் சைவாகமங்களை ஓதி அவைகளால் உணர்த்தப்படும் நான்கு பாதங்களையும் அறிந்தவராயும், சரியையைப் பின்பற்றுபவராயும் கிரியைகளைச் செய்வதில் வல்லவராயும், யோகப் பயிற்சி உடையவராயும் ஞான நெறியில் நாட்டமுள்ளவராயும் இருத்தல் வேண்டும். தீட்சை ஆண் பெண் ஆகிய இருபாலாரும் பெறுவதற்கு உரியது. முத்தியை மட்டுமே நோக்கமாகக் கொண்டு தீட்சை பெற விரும்புவோர் இல்லறத்திலுள்ள ஆசாரியரிடம் தீட்சை பெறலாம்.

தீட்சை அளிக்கப்படும் முறை பற்றி நோக்குகையில் கிரியாவதி முறையிலேயே செய்யப்படும் சமய தீட்சையைக் காண்போம். தீட்சைக்கு முதற்படியாக இடம் ஒழுங்கு செய்யப்படும். இந்த இடம் மண்டலம் எனப்படும்.

நீர் தெளித்து தடவி மண்டலமிடப்படும். ஓமத் தீ வளர்ப்பதற்காக குண்டம் அமைக்கப்படும். பின்னர் துவார பாலகருக்கு அர்ச்சனை செய்யப்படும். ஆசாரியர் இடையூறுகளைப் போக்குவதற்கு அஸ்திர மந்திரத்தினால் தான சுத்தி செய்கிறார். பின்னர் எள், தருப்பை, பால் முதலான திரவியங்களை மந்திர நீர் தெளித்துச் சுத்தி செய்கிறார். பின்னர் ஆசாரியார் தன்னைச் சிவனாகப் பாவனை செய்கின்றார். மந்திர பூர்வமாகத் தலைப்பாகை, உத்தரீயம், தூய ஆடை ஆகியவற்றை அணிந்து கொண்டு திருநீற்றினாலும் உருத்திராக்கம் முதலிய பிற அணிகளாலும் தேசிகர் தம்மை அலங்கரித்துக் கொள்கின்றார். அடுத்து அவர் மண்டலத்தைச் சுத்தி செய்வதற்குரிய கிரியைகளைச் செய்து மண்டல வடிவினளான மகாலக்குமியைப் பூசிக்கின்றார். பின்னர் இரத்தினம், இட்டு நீரால் நிரப்பப்பட்ட பூரண கும்பத்தை மாவிலை, சந்தனம் ஆகியவற்றால் அலங்கரித்து தானியங்களின் மீது வைத்து அதற்குப் பூசை செய்கின்றார்.

அதன் பின்னர் ஆசாரியார் அட்ட திக்குப் பாலகர்களையும் பிற தேவதைகளையும் பரமேசுவரனையும் வேண்டி பின்னர் கணேசருக்கு மண்டலத்தின் மத்தியிலுள்ள கும்பத்தின் கீழ் இடப்படும் யந்திர வடிவிலான மண்டலேசருக்கும் பூசைகள் செய்யப்படுகின்றன. இவை முடிந்த பின் ஓமத்திற்குரிய அக்கினியை விதிப்படி உண்டாக்கும் கிரியைகள் நடைபெறும். சீடனை மந்திர விதிப்படி சுத்தி செய்வதற்கு ஓமட் நடைபெறுகின்றது. சாந்தி ஓமத்தில் பால் முதலான இனிப்புப் பொருட்கள் இடப்படும். ஓமம் முடிந்த பின்னர் நீராடித் தூயஆடைஅணிந்து தீட்சை பெறுவதற்குக் காத்திருக்கும் சீடனைச் சிவகமத் தன்மை கைவரப் பெற்ற ஆசாரியர், பிரணவமாகப் பாவிக்கப்படும் ஆசனத்தில் இருக்க வைத்து நயன தீட்சை செய்வார். அதாவது ஆசாரியர். அருட் பார்வையாற் சீடனைத் தலை முதல் பாதம் வரை பார்ப்பார். பின்னர் அவர் சீடன் மீது மந்திர நீர் தெளித்து விதிப்படி மந்திரங்களைப் பிரயோகித்து மூல மந்திரமாகிய பிரணவத்தினால் தனது வலக் கையைச் சீடனுடைய தலை மீது வைப்பார். இவ்வாறு சமய தீட்சை பெற்ற சீடன் சைவ அனுட்டானம் செய்வதற்குரிய தகுதியைப் பெறுகின்றான்.

சமய தீட்சை பெற்றவர்கள் விதிப்படி கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் அனுட்டானம் எனப்படும். இவ் ஒழுக்கங்களிலே நீராடல், சந்தியா வந்தனம், செபம், தியானம், குருசேவை, சரியைத் தொண்டு முதலியன அடங்கும். சந்தியாவந்தன வழிபாட்டில் நீராடல், சிறிதளவு தூய நீரை உட்கொள்ளலாகிய ஆசமனம், மூச்சை உள்ளே இழுத்துச் சிறிது

நேரம் நிறுத்தி வைத்து ஒழுங்கு முறைப்படி போக்கு வரவு செய்ய விடுதலாகிய பிராணாயாமம், மந்திர செபம், தியானம் போன்ற அனுட்டானங்கள் இடம் பெறும். இவ்வனுட்டானங்கள் உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருப்பதற்கும் மனத்தை ஒழுக்கப்படுத்துவதற்கும் உதவுவன. சமய தீட்சை பெற்றவர்களுக்குப் பஞ்சாட்சர மந்திர செபம் மிக முக்கியமானது. ஏனைய கருமங்கள் அதற்கு அங்கமாகக் கொண்டே செய்யப்படுவன எனலாம். மேலும், அனுட்டானம் செய்யும் போது விபூதியை திரிபுண்டரமாகத் தரித்தல் வேண்டும்.

சமய தீட்சை பெற்றவர்கள் கொல்லாமை, கள்ளாமை, பிறர் மனை நயவாமை, அருளுடைமை, பொறையுடைமை, வஞ்சனையழன்மை, மனங் கலங்காமை, மீதூண் விரும்பாமை (அளவாக உண்ணல்), தூய்மை முதலிய இயமத்தையும், தவம், தெய்வ நம்பிக்கை, ஈகை, மூத்தோர் வழிபாடு, செருக்கின்மை, உண்மை நூல் ஆராய்ச்சி, நன்மை தீமைகளைப் பகுத்தறிதல், விரதம் முதலிய நியமத்தையும் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும். இவற்றோடு தேவார திருவாசக பாராயணம், சிவாலயத் தொண்டு, சிவாலய தரிசனம் போன்ற கருமங்களையும் செய்து வரும் பயிற்சியினால் படிப்படியே மனப்பக்குவம் சிறந்து முடிவிலே முக்தியையும் பெறலாம். இதுவே மானிடப் பிறப்பினால் பெறத்தக்க பெரும் பேறு.

எனவே சைவசமயத்திற் பிறந்தவர் யாவரும் சமயஒழுக்கங்களைக் கடைப் பிடிப்பதற்குத் தீட்சை பெற்றுக் கொள்ளல் வேண்டும். சபீச முறையிலான தீட்சையினைப் பெற முடியாவிட்டால் நிர்ப்பீச முறையிலாவது சமயதீட்சை பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு தீட்சை பெற்றோர் தத்தமக்கு இயன்ற அளவிலாயினும் நீராடல், செபம், தியானம், முதலியவற்றைக் கைக் கொண்டு ஒழுக இடமுண்டு. நிர்ப்பீச தீட்சையிற் சாதித்த சாதனைப் பயனால் இப்பிறப்பிலேனும் மறுபிறப்பிலேனும் சபீச தீட்சை பெற்றுச் சரியை, கிரியை, யோகம் ஆகியவற்றைச் சாதித்து ஞானத்தால் முத்தி எய்தலாம்.மனித வாழ்வில் தூய்மையை வெளிப்படுத்துவதும் இந்து மதமேயாகும்.


**சுகுமார் வெடிங் சென்ரர்**

சகல வீதமான

ஒட்டுவேலைகளும் செய்து

தரப்படும்

மாலை சந்தை,

கரவெட்டி.

**மந்திகை — மருந்தகம்**

சகல வீதமான

மருந்துவகைகளையும்

பெற்றுக்கொள்ளலாம்

*பருத்தித்துறை வீதி,*

*மந்திகை.*

# சைவ சித்தாந்தம் கூறும் பதி



**த.மீனலோசினி**
தரம்: $13A_2$
நெல்லியடி ம.ம.வி.
கரவெட்டி.

இந்து மதத்தின் இரு பெரும் தத்துவப் பிரிவுகளில் ஒன்றாக சைவ சித்தாந்தத்த தத்துவம் விளங்குகின்றது. இது சைவத்திற் குரிய சிறப்பு வாய்ந்த தத்துவமாக விளங்குகின்றது. சித்தாந்தம் என்ற சொல்லினை சித்தம் + அந்தம் என வகுத்து நோக்குவர். இதில் சித்தம் என்பது தெளிவு என்பதையும் அந்தம் என்பது முடிவு என்பதனையும் குறிக்கின்றது. அதாவது தெளிந்த முடிவே சைவ சித்தாந்தம ஆகும். இதனையே "வேதாந்த தெளிவாம் சைவ சித்தாந்தம்" என்ற கூற்று புலப்படுகின்றது.

சைவ சித்தாந்த தத்துவக் கோட்பாடு உருவாக்கம் பெறுவதற்கு பல வேறு காரணங்கள் அடிப்படையாக அமைந்தன. அவையாவன பின் வரும் வகையில் நோக்கலாம்.

1) இந்துத்துவக் கோட்பாடுகளின் தோற்றத்திற்கு உப நிடதங்கள் மூல காரணமாக அமைகின்றன. சைவ சித்தாந்தத்திற்கும் இவ் உபநிடதங்களேஅடிப்படை நூலாக அமைந்தது. வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம் என்ற கூற்று சித்தாந்த தத்துவக் கோட்பாட்டின் உருவாக்கத்திற்கு உபநிடதங்களே அடிப்படை என கூறுகின்றது.

2) சைவசித்தாந்தத்தினை ஆகமாந்தம் எனக் கூறுகின்றார். சைவ சித்தாந்தத்தின் உருவாக்கத்தில் உபநிடதங்களைவிட மிகுந்த செல்வாக்கு உடையவையாக சிவாகமங்களே விளங்கி இருந்தன. இச் சிவாகமங்களின் ஞான பாதப்பகுதியில் இடம் பெறும் பதி, பசு, பாசம் பற்றிய விளக்கங்களே சைவ சித்தாந்த தத்துவக் கோட்பாடுகளாகஉருவாகின.

சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்களின் உருவாக்கத்திற்கு புராணங்களும் அடிப்படையாக அமைந்தன. சிவபுராணங்களும் உயரிய சைவ சித்தாந்த விளக்கங்கள் பொதிந்துள்ளன. உதாரணமாக பெரிய புராணம், கந்தபுராணம் போன்ற சைவ சித்தாந்த கருத்துகளுக்கு அடிப்படையாக அமைந்தன.

சைவத் தோத்திரங்கள் யாவும் சித்தாந்த கருத்துக்களின் தோற்றத்திற்கு மூலமானவை தேவாரம், திருவாசகம், திருமுருகாற்றுப் படை போன்ற தோத்திரங்களில் எல்லாம் சைவ சித்தாந்த விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன.சைவ சித்தாந்த தத்துவக் கோட்பாட்டின் தோற்றத்திற்கு திரு மூலரின் திருமந்திரம் முதன்மையான நூலாக அமைந்தது. தோத்திரங்களிலே சாஸ்திர நூலாக அமைந்த திருமந்திரத்தில் உயரிய சைவசித்தாந்த கருத்துக்கள் இடம் பெற்றன. சந்தானகுரவர்களின் தோற்றமும் 14 மெய்கண்ட சாஸ்திர நூலின் தோற்றமும் சைவ சித்தாந்த கோட்பாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படை ஆயின. இவையே சித்தாந்த கருத்துக்கள் யாவற்றையும் ஒன்றாக தொகுத்து வைத்துள்ளன.

சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் எனும் முப்பொருளினை பற்றிப் பேசுகிறது. பதி என்பது இறைவனையும் பசு என்பது ஆன்மாவையும் பாசம் என்பது ஆணவம் கன்மம் மாயை என்ற மும் மலங்களையும் உலகத்தையும் குறித்து நிற்கிறது. இம்முப்பொருளின்மை பற்றிய கருத்துக்களை மெய்கண்ட சாத்திரங்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. மெய்கண்ட சாத்திரங்கள் முப்பொருளின்மையை விளக்குவதற்கு காட்சி அளவை அனுமானம், ஆப்த வாக்கியம்என்று மூன்ற வகை அளவைப் பிரமாணங்களை ஏற்றுக் கொண்டாலும் அவற்றின் ஆப்த வாக்கியத்திற்கே மிக முதன்மை கொடக்கின்றன. ஆப்த வாக்கியம் என்றால் உண்மை வாக்கியம் என்பது பொருள் வேதங்களும் ஆகமங்களுமே ஆப்த வாக்கியங்களாக சைவசித்தாந் தங்களாக ஏற்றக் கொள்ளப்பட்டுள்ளன. எனவே ஆப்த வாக்கியத்தை அந்திப் பிரமாணம், ஆகமப் பிரமாணம் எனவும் அழைப்பர். இவ் வேதாகமக் கருத்தக்களைஅடிப்படையாகக் கொண்டு சைவ சித்தாந்தம் முப் பொருளின்மையை விளக்குகின்றது. இம் முப் பொருட்களிலும் மேலானது பதி எனப்படும் இறைவனாகும். இதனை சிவப்பிரகாசம்

"பலகலை ஆகமவேதம் யாவையினும் காத்தும்
பதி, பசு, பாசம் தெரிதல் பதிபரமே" எனக் கூறுகிறது.

சைவ சித்தாந்தம் கூறும் பதி பற்றிய கருத்துக்களை இருவகை யாகப் பிரித்து விளக்கலாம்.

1) பதியின் உண்மைத் தன்மை
2) பதியின் இலக்கணம், இயல்பு

வேதங்களும் ஆகமங்களும் கடவுள் உண்மையை சிறப்பாக விளக்கும் நூல்களாகும். வேதாகமங்களை ஆப்த வாக்கியங்களாகக் கொண்டு சைவ சித்தாந்திகளும் கடவுள் என, ஒரு பொருள் உண்டு எனக் கூறி அதனால் பதி என்ற பெயரினால் அழைக்கின்றனர்.

காட்சிக்குப் புலனாகக் கூடிய பொருள் உலகம் ஆகும். இவ்வுலகின் உண்மையைக் கொண்டு அதனைப் படைத்தவனும் ஒருவன் உளன். அவன்தான் இறைவன் என்ற அனுமானத்திற்கும் இடம் கொடுக்கின்றனர். ஒரு பானையைப் பார்க்கும் போது அதனை வனைந்த குயவனும் ஒருவன் இருக்க வேண்டுமென்பதை அனுமானித்து அறிந்து கொள்கின்றோம். இதே போன்ற உலகத்தைப் பார்க்கும் போது அதனைப் படைத்தவனும் ஒருவன் இருக்க வேண்டும் என்பதை ஊகித்து அறிந்து கொள்ளலாம். அவ்வாறு உலகின் தோற்றத்திற்கு இறைவனே நிமித்த காரணம் எனக்கூறி இறைவனுண்மை விளக்கப்படுகிறது. அதாவது ஒரு காரிய நிகழ்ச்சிக்கு வேண்டப்படும் காரணங்கள் மூன்றாகும். அவை முதற் காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் என்பனவாகும். மண்ணிலிருந்து பானை தோன்றுகிறது. எனவே பானைக்கு முதற் காரணம் மண் திரிகை போன்றனவற்றின் துணை கொண்டு தோன்றுகின்றது. எனவே திரிகை முதலியன துணைக் காரணம் ஆகும். குயவனின் நிமித்தமாக பானை தோன்றுகிறது. எனவே குயவன் நிமித்த காரணம் என்று அறிய முடிகிறது. இதே போன்ற மாயையில் இருந்து உலகை இறைவன் தனது சக்தியைத் துணையாகக் கொண்டு தோற்றுவிக்கிறான். எனவே உலகின் தோற்றத்திற்கு முதற் காரணம் இறைவனது சக்தி. துணைக் காரணம். இறைவன் நிமித்த காரணம் என அறியலாம். இவ்வாறு உலகின் உண்மையைக் கொண்டு அதனைப் படைத்தவனும் ஒருவன் உளன் என்பதை சைவசித்தாந்தம் நிரூபிக்கின்றது. (தொடரும்)


**ஜெயலீலா**
**சிகை அலங்கார**
**நிலையம்**


*உரிமை - க.சிவகுமார்*

40 மல்வத்தை வீதி,
கொழும்பு 11



**கிங்**
**தொலைத்தொடர்பு**
**நிலையம்**
*உள்நாட்டு,வெளிநாட்டுத்*
*தொடர்புகளுக்கு*

62A கொட்டாஞ்சேனை வீதி
கொழும்பு 13



# மத்துவர் வேதாந்தம்

**கி.கோபிகா**
தரம்: $13A_2$
கலைப்பிரிவு
யா/நெல்லியடி ம.ம.வி.

## அறிமுகம்:

வேதாந்திகளின் வரிசையில் குறிப்பிடத்தக்கவராக விளங்கும் மத்துவர் துவைத வேதாந்தத்தை அருளியவர். தென்னாட்டிலே உடுப்பி என்னும் இடத்தில் தோற்றம் பெற்ற இவர் கி.பி. 1199 - 1278 வரை வாழ்ந்தவராவார். இவர் மூவகைப் பிரமாணங்களையும் பிரம்மசூத்திரம், பகவத் கீதை, தசோ உபநிடதங்கள், அனு வியாகட்கியானம், மகாபாரத தார்ப்பரிய நிர்ணயம், விஷ்ணு தார்ப்பரிய நிர்ணயம், தத்துவப் பிரகாசிகை உரை முதலான நூல்களையும் கொண்டு துவைதக் கொள்கையை நிறுவினார். இவ்வாறு விளங்கும் துவைதக் கோட்பாட்டை மேல்வருமாறு நோக்குவோம்.

## துவைதம் என்றால் என்ன?

துவைதம் எனும் சொல்லானது துவி எனும் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றது. துவி என்பதன் பொருள் இரண்டு என்பதே. இவரது கருத்தின்படி தத்துவ ஞானத்திற்கு வேற்றுமைதான் (பேதம்) மையமாகத் திழ்கின்றது என்பதனால் இவரது கொள்கை துவைதம் எனப்படுகின்றது. மத்துவரது கொள்கையின்படி ஆன்மா வேறு பிரமம் வேறு. இவை இரண்டு எனும் நிலை நீங்கி ஒன்று எனும் நிலையை ஒரு போதும் அடைவதில்லை. எப் போதும் இவை இரண்டும் இரண்டுதான் எனும் இருமைத் தன்மையை வலியுறுத்தியதனால் இவரது கொள்கை துவைதம் எனப்படுகின்றது.

## மத்துவர் காட்டும் பிரமம்

மத்துவர் காட்டும் பிரமமம் உண்மைப் பொருள். அதனை ஈஸ்வரன் எனக்குறிப்பிட்டார். மத்துவர் காட்டும் பிரமம் ஹரி என்ற மகாவிஷ்ணுவின் அதி உயர்ந்த இருந்தபடி இருக்கும் பொருள் அதுவே என்றார்.

மத்துவர் பிரமம், ஆன்மா, உலகம் என்பவற்றை உண்மைப் பொருளாகக் காட்டியிருந்த போதிலும் அவற்றுக்கிடையே ஐவகைப் பேதங்களை எடுத்துக் காட்டி அவற்றில் இறைவனை முதன்மைப்படுத்திக் காட்டியிருந்தார்.

அவையாவன இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையே உள்ள பேதம் ஜீவேஸ்வர பேதம், இறைவனுக்கும் ஜடத்திற்கும் இடையே உள்ள பேதம் ஜடேஸ்வர பேதம், ஆன்மாவுக்கும் ஆன்மாவிற்கும் இடையேயுள்ள பேதம ஜீவபரஸ்பரபேதம், ஜடப் பொருளுக்கும் வேறொரு ஜடப் பொருளுக்கும் இடையேயுள்ள பேதம் ஜடபரஸ்பரபேதம் என்பவையாகும்.

மத்துவர் காட்டும் பிரமம் சார்பற்றவன்.அவனே மிக உயர்ந்த பொருள் அதாவது சர்வோத்தமன் என்றார். இவ்இறைவன் அனைத்துக் குணங்களையும் பூரணமாக அமையப் பெற்றவன் என்பதனால் குணபூரணணன் என்றார். அறியப்பட வேண்டிய மிக உயர்ந்த பொருள் அவன் ஒருவனே எனவும் உலகின் தோற்றத்திற்கு அவன் முதற் காரணன் அல்ல நிமித்தக் காரணனே என்றார். ஆயினும் அவனே உலகினைப் படைப்பவன், கட்டுப்படுத்துபவன், அழிப்பவன் என்றார். இவ் இறைவன் தன்னைப் பலவேறு வடிவங்களில் வெளிப்படுத்துகின்றான் எனவும் அப்போது பல அவதாரங்களை எடுக்கின்றான் எனவும் குறிப்பிடுகின்றார்.

## மத்துவர் காட்டும் உலகம்

மத்துவர் காட்டும் உலகம் உண்மைப் பொருள். அதனை ஜடம் என்றார். உலகத்தின் தோற்றத்திற்கு பிரகிருதியே முதற் காரணம் அதாவது பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கு முதற் காரணமாக விளங்கும் சடப் பொருளே பிரகிருதி என்றார். இவ் உலகின் தோற்றத்திற்கு நிமித்த காரணன் பிரமமே எனவும் அவன் மகாலஷ்மியை திருவருட் சக்தியாக்கி பிரகிருதியில் இருந்து உலகினைப் படைக்கின்றான் என்றார். மேலும் பிரகிருதியில் இருந்து தோற்றம் பெறுபவை ஆன்மாக்கள் தமது இலட்சியத்தை அடைவதற்கு வேண்டிய வழிகளையும் வகைகளையும் வழங்குகின்றன என்றார்.

## மத்துவர் காட்டும் ஆன்மா

மத்துவர் காட்டும் ஆன்மா உண்மைப் பொருள். அவை எண்ணிறைந்தவை எனக் கூறி அநேகாத்ம வாதத்தினை வலியுறுத்துகின்றார். இவரது கருத்தின்படி ஆன்மா இயல்பாகவே ஞானம், ஆனந்தம் பொருந்தியவை. ஆயினும் ஆனந்தமே ஆன்மாவின் சிறப்பியல்பு என்றார். இவ்வாறு விளங்கும் ஆன்மாக்கள் முன்னைய கன்மத்தின் பயனால் ஜடப் பொருள்களுடன் தொடர்பு கொண்டு துன்பப்படுகின்றன என்று கூறுவதுடன் இவ் ஆன்மாக்கள் அடிப்படையில் வேறுபட்டவை எனக்கூறி ஆன்மாக்களை நித்திய முத்தான்மாக்கள்,முத்தான்மாக்கள், பந்தான்மாக்கள் என வகைப்படுத்துகின்றார். பந்த ஆன்மாக்களை வீடுபேறு அடைவதற்குரிய ஆன்மாக்கள், வீடுபேறு அடைய தகுதியற்ற ஆன்மாக்கள் என

வகைப்படுத்தினார். வீடுபேறு அடையத் தகுதியற்ற ஆன்மாக்களை சம்சார பந்தத்திற்கு உட்படும் ஆன்மாக்கள், காரிருள் நிறைந்த இடமாகிய நரகத்திற்கு விதிக்கப்பட்ட ஆன்மாக்கள் என மேலும் வகைப்படுத்தினார். மத்துவரது கருத்தின்படி கருத்திற்கு விதிக்கப்பட்ட ஆன்மாக்களுக்கு பாவ விமோசனமில்லை. இவரது கருத்தின் படி முத்தி நிலையிலும் ஆன்மாக்கள் தத்தமது தகுதிக்கேற்ப அனுபவிக்கும் ஆனந்தத்திலும் வேறுபாடு உண்டு என்றார். மேலும் முக்குணங்கள் பற்றி குறிப்பிடும் போது சாத்வீக குணமுடைய ஆன்மாக்கள் முத்தி இன்பத்தைப் பெறுகின்றன என்றும் இராஜத குணமுடைய ஆன்மாக்கள் சம்சார பந்தத்தில் உழலுகின்றனஎன்றும் தாமச குணமுடையவை நித்திய நரகத்தில் உழலுகின்றனஎன்றும் கூறி இருந்தார்.

## மத்துவர் காட்டும் முத்தியும் அதனை அடைவதற்குரிய வழிகளும்


மத்துவரது கருத்தின்படி ஆன்மாக்கள் தத்தமக்குரிய இயல்பான ஆனந்தத்தை அனுபவிப்பதே முத்தி என்றார். இவரது கருத்தின்படி ஆன்மாக்களின் வேறுபாடுகள் முத்தி நிலையிலும் அப்படியே இருக்கம் எனவும் அதாவது ஆன்மாக்களினது தகுதிக்கேற்ப அவை அனுபவிக்கும் ஆனந்தத்திலும் வேறுபாடு அப்படியே இருக்கும் என்றார்.

இவரது கருத்தின்படி உலக வாழ்க்கையில் ஆன்மாவும் பிரமமும் எவ்வாறு இரண்டாகக் காணப்படுகிறதோ அவ்வாறே முத்தி நிலையிலும் இரண்டாகவே காணப்படுகின்றது. என்பதனால் இவரது கொள்கை துவைதம் எனப்படுகின்றது. மேலும் இறைவனைஅணுக முடியாது எனவும் வாயுபகவானது அனுசரணையின் ஊடாகவே அணுக முடியும் என்றும் கூறியிருந்தார்.

ஸ்மாட்
தையல் நிலையம்
உரிமை. S.ராஜசேகர்
72புதிய பேருந்து நிலையம் மேல்மாடி,
வவுனியா.
TP No.024 222 2518

புதிய
ஒலிம்பியா
உரிமை. M.P.சேகர்
TP No.024 222 0004
புதிய பேருந்து நிலையம் மேல்மாடி,
வவுனியா.

# உபநிடதங்கள்



**எஸ்.சுகந்தன்**
தரம்: 12A²
நெல்லியடி ம.ம.வி.
கரவெட்டி.

வடஇந்திய வரலாற்றுக் காலங்களில் எழுந்ததாகக் கருதப்பட்ட வேதங்களில் இறுதிப் பரப்பில் எழுந்த இலக்கியம் உபநிடதம் எனப்பட்டது. உபநிடதம் என்ற வேதப்பரப்பு இறுதிக் கால கட்டத்தில் எழுந்த தன்மையினால் வேத அந்தம் எனவும் வேத சிரசு எனவும் அழைக்கப்படுவது நியாயமே. ஆயினும் இது ஏன் உபநிடதம் என வழங்கப்படவேண்டும் என ஆராய்வோமானால் அதற்கான காரணத்தை நோக்குகையில் உப என்றால் நெருங்கி நிஷத் என்றால் அமருதல் என்றே நேரடியாகப் பொருள் கொள்ள முடிந்தது. ஆனால் நெருங்கி அமருதல் என்ற கருத்தைக் கொண்டு உபநிடதங்கள் கூறும் பொருள் அமைவைச் சிந்திப்போமானால் இது சாதாரண பொது மக்களால் விளங்கிக் கொள்ள முடியாததாகி ஆராய்ச்சியையும் (அரசாட்சி) பூர்வமான முடிவுகளையும் கொண்டிருத்தலால் ஆராய்ச்சி (அரசாட்சி) உணர்வைப் பெற்றிருந்த ஆன்மீக நிலையில் உயர்ந்தோனாகவும் ஞான அறிவு மிக்கோனாகவும் விளங்கிய பக்குவ நிலைப்பாட்டாளர்களை மட்டுமே ஆசிரியர் தனக்கு அண்மையிலே இருத்தி அவர்களுக்கு மட்டுமே கூறப்பட்ட கருத்துக்களின் தொகுப்பே இங்கு காணப்படுவதால் இது உபநிடதம் என்ற பெயரைப் பெற்றுக் கொண்டது எனலாம்.

சாதாரணமான கருத்துக்களாக மட்டுமன்றி ஆராய்ந்து கருத்துக் கூறி இருத்தலால் இவை தத்துவங்கள் என்ற சிறப்பைப் பெற்றுக் கொண்டன. (இவ் உபநிடதங்கள் வினாக்களையும் விடைகளையும் உள்ளடக்கிய சம்பாசனை முறையில் அதைப் பற்றி ஆராயவே அங்கு நாம் கூடுதலாக அறியமுடிந்தது.) அந்த ஆராய்வுகளை நிகழ்த்த வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டிருக்க வேண்டும் எனச் சிந்திப்போமாயின் குறிப்பிட்ட காரணங்களை நாம் முன் வைக்க முடியும்.

அதாவது (1) வேதகால முதல் பகுதியினர் வளமான சிந்தனை அறிவு அற்றவர்களாகக் காணப்பட்டிருந்தனர். இவர்கள் இயற்கைச் சக்திகளுக்கு கற்பனையில் உருவ நாமங்களை வழங்கிய வழிபாடியற்றினர். ஆனால் காலப்போக்கிலே சிந்தனை விருத்தி அடையத் தொடங்கியபோது பல சிந்தனையாளர்கள் தோன்றி தமது சிந்திக்கும் ஆற்றலின் மூலம் பக்தியில் வழிபாட்டு முறையைக் கண்டித்து அங்கு வணங்கப்பட்ட தெய்வங்களை வணங்கத் தெய்வங்கள் அல்ல என தமது ஆராய்வை இறைவனைப் பற்றியதாக ஏற்படுத்தத் தொடங்கியமையே உபநிடதங்களின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக இருக்கலாம்.

(2) வேதகால மனிதர்கள் இயற்கைச் சக்திகளை கிரியைகளாலும், யாகங்களாலும் வழிபடத் தொடங்கினர். இடைப்பட்ட வேதகாலப் பரப்பிலே கிரியைகள் இன்றேல் வாழ்க்கை இல்லை என்றும் கிரியைகள் ஒழுங்குற ஆற்றப்பட்டால் கேட்கின்ற பலனை உடனடியாகவே பெற்ற விட முடியும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையில் கிரியைகளையும் யாகங்களையும் ஆற்றத் தொடங்கினர். ஆனால் கிரியைகளாலும் யாகங்களினாலும் எதிர்பார்த்த பலாபலன் அடைய முடியாது இருந்த பொழுது அவ் வழிபாட்டு முறையில் ஏற்பட்ட சிந்தனைக்கு அடிப்படையாக அமைந்த உபநிடதங்களின் தோற்றத்திற்கு காரணமாக இருக்கலாம். இது மட்டுமன்றி கிரியைகள், யாகங்கள் என்பன ஆற்றப்படுவதற்கு பெரும் பொருட் செலவு ஏற்பட்டமையினால் இந்த முறைமையை செல்வம் படைத்தோர் மட்டுமே ஆற்ற முடிந்தது. இந்த நிலையில் ஏனையோர் மத்தியில் இவ் வழிபாட்டு முறைகளை கடைப்பிடிக்க முற்பட்ட போது மனிதன் கண் ஏற்பட்ட சிந்தனை வளர்ச்சி உபநிடதங்களை உருவாக்க உதவியது எனலாம்.

எனவே மேற் கூறப்பட்ட இந்தக் காரணங்களால் சிந்திக்கும் ஆற்றல் குறைந்த சிந்தனையாளர்கள் தமது சிந்தனை வெளிப்பாடுகள் பலவற்றை வெளிப்படுத்தி இருந்த போதிலும் கூட தனிப்பட்ட கருத்துக்களின் தொகுப்பாக 200 உபநிடதங்கள் மட்டுமே எமது கைக்கு கிடைத்தன. அவற்றுள்ளும் 108 மட்டுமே தெளிவுபடுத்தப்பட்ட தன்மையில் கிடைக்கப் பெற்றதாகவும் 10 சிறப்புக்குரியதாகவும் கொள்ளப்படுகின்றது. மேற் கூறப்பட்ட இந்த உபநிடதங்களை உடுத்துக் கொண்டு இவை ஆராய்கின்ற உலகம், உயிர், இறைவன் எனப்பட்ட 3 பொருட்களையும் எந்த வகையில் ஆராயத் தொடங்கினர் என நோக்குவோமாயின் ஆராய்விற்கு முன்னர் அந்தப் பொருட்களையும் நித்தியப்படுத்தி உள்ளதை நோக்க முடிந்தது. அங்ஙனம் நித்தியப்படுத்துவதற்கு மூன்று அளவைகளை இவர்கள் பயன்படுத்தி

இருந்தனர். இந்த அளவைகள் பிரமாணம் எனப்பட்டன. அவையாவன பிரத்தியட்சப் பிரமாணம் அனுமானப் பிரமாணம், கருதுதல் அளவை என்றும் ஆப்த வாக்கியப் பிரமாணம் சொல் அளவை என்றும் கொள்ளப்பட்டது. இதிலே நித்தியப் பிரமாணத்தினால் உலகினையும் அனுமானப் பிரமாணத்தினால் உயிரினையும் ஏற்றுக் கொண்டாலும், ஆப்த வாக்கிய வாதிகள் எனப்படும் முன்னோர்களான வேத காலத்தவர்கள் இறைவனைப் பற்றி கொண்டிருந்த கருத்துக்களை ஏற்க மறுத்து உபநிடத வாதிகள் ஆப்த வாக்கியங்கள் கூறிய இறைவன் பற்றிய சிந்தனைகளிலேயே கூடுதலான கவனத்தைச் செலுத்தி ஆராய முற்பட்டனர். இதனாலேயே 3 பொருட்களைப் பற்றி ஆய்வு காணப்பட்டாலும் சிறப்பிக்கப்பட்ட 10 உபநிடதங்களிலும் இறை பற்றிய ஆராய்ச்சி முடிவுகளாக இவற்றைத் தந்துள்ளன என நோக்குவோம்.

உபநிடதங்கள் ஆராய்ச்சியையும், ஆராய்ச்சி பூர்வமான முடிவுகளையும் வெளிப்படுத்தும் சிறப்பு மிக்க தத்துவங்களாகக் காணப்பட்டிருந்தாலும் உபநிடதங்கள் முழுமையிலும் 3 பொருட்களும் தெளிவான தன்மையில் ஆராய்விற்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக காண முடியவில்லை. ஆனாலும் எல்லா உபநிடதங்களிலுமே இறைவனைப் பற்றி ஆராய்வு முக்கியப்படுத்தப்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும். அதற்கான காரணத்தை நோக்குவோமாயின் உபநிடதங்களில் இறைவன் பற்றிய ஆப்த வாக்கியங்களால் கூறப்பட்ட இயற்கை சக்திகளை தெய்வங்கள் எனக் கொள்வதற்கு உபநிடத வாதிகள் மறுத்தமையினால் இறைவனைப் பற்றிய ஆய்வு முக்கியத்துவமான இடத்தை வகித்தது. எனலாம். (தொடரும்)


**புதிய ஈஸ்வரன் மருந்தகம்**

**சகல மருந்துகளையும் பெற்றுக் கொள்ளலாம்**

TP.No. 0112-338827

23 கிராண்ட்பாஸ் வீதி,
கொழும்பு 14

**சப் குளியலறை உபகரண வியாபாரநிலையம்**

சகல விதமான உபகரணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

**உரிமை..வ.சந்திரபிரகாஸ்**

சாரையடி, புலோலி தெற்கு,
புலோலி.

# சைவ சமய வளர்ச்சியில் சிவாசாரியார்களின் பங்கு



கௌரிபாலக்குருக்கள் லாவண்யா
கௌரிபாலக்குருக்கள் சரண்யா
தரம்: 12
நெல்லியடி ம.ம.வி.
கரவெட்டி.

சைவசமயம் தொன்மையானது. சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டது. இந்து சமயப் பெருவிருட்சத்திலே விநாயகர், சிவன், முருகன், விஷ்ணு முதலியபல வேறுகடவுளரை வணங்கும் சமயப்பிரிவுகள் மலர்களாக மணம் வீசுகின்றன எல்லா வழிபாடுகளிலும் குருவின் முக்கியத்துவத்தை நாம் காணலாம். "குருவில்லா வித்தை பாழ்" என்று கூறுவர் பொதுவாகக் கலைகள், கல்வித்துறைகள் முதலியவற்றிலும் கூடக் குரு பக்தியும் விசுவாசமும் அவசியம் என வலியுறுத்தப்படுவதை அவதானிக்கலாம்.

சமயம் என்பது வாழ்க்கை நெறி. நல்ல முறையில் இகலோக வாழ்க்கையை அமைத்து வாழ்ந்து ஞானநிலையடைந்து இறைபதம் சென்றடைய வழிகாட்டுவதே சமயம். அதற்கான நெறிகளை வகுத்துத் தருபவரே குரு.

கு-என்பது அறியாமை. ரு - என்பது அழித்தல். அறியாமையை அழித்து ஆணவ மலத்தை வலி குன்றச் செய்து ஞானம் வளரச் செய்து இறைபதத்திற்கு வழிகாட்டுபவரே குரு. திருவருளே குருவாக வருவார் என்ற திருவருட் பயன் கூறுகிறது. அதனால்தான் குருவைச் சிவனாகவே வழிபடுவர்.திருவருட் பயனில் குருவின் மகிமை கூற வந்த உமாபதி சிவாச்சாரியார் நல்ல ஒரு உதாரணம் கூறுகிறார். வெயிலில் வைத்த பஞ்சு எரிவதில்லை. ஆனால் பூதக் கண்ணாடி ஒன்றினூடாக அதே வெய்யிலைச் செலுத்தும் போது உடனே எரிந்து விடுகிறது. எரிப்பது சூரியன். எரிவது பஞ்சு. ஆனால் இடையில் குரு இல்லாமல் ஞானம் தோன்றாது. அதனால்தான் சைவ சமயமரபில் மிக முக்கியமாகக் குருவைப் போற்றுகிறார்கள்.

இனி குரு யார் என்றால் சிவாச்சாரியரே பெரிதும் குருவாகிறார். சில இடங்களில் - புராணக் கதைகளில் குருவாகி வந்து அறிவூட்டுபவர் சிவாசாரியாரே.தீட்சா குருவாகத் தீட்சை வழங்கி போதக குருவாகஇருந்து அவ்வப்போது சமய உண்மைகளைப் போதிப்பதுடன், சாதக குருவாயிருந்து அன்றாடம் நமது ஆலய வழிபாட்டுக் கடமைகள், இல்லறக் கடமைகள் முதலியவற்றைச் செய்விப்பவராகவும் அவரே விளங்குகின்றார்.எனவே சைவ சமயத்தின் முதல் நிலையில் ஐவத்து எண்ணப்படுபவராக சிவாச்சாரியார் விளங்குகின்றார். இதனால்தான் அவர் "புரோகிதர்" எனக் கூறப்படுகிறார். (புர - முன்னால், இத - வைக்கப்படுபவர்)

"அநாதி சைவர்" எனப்படும் பரமசிவனது ஐந்து திருமுகங்களிலும் தோன்றிய பாரத்வாஜர் முதலிய ரிஷிகுலங்களின் மரபிலே வந்த சிவத்துவிசர்கள் எனப்படும் சிவப் பிராமணர்களே 'ஆதி சைவர்' எனப்படும் சிவாசாரிய வம்சத்தவராவர் என்கிறது காமிகாமம். இச்சிவப் பிராமணர்கள் வேதம், சிவாகமம் என்னும் இரண்டிலும் கூறப்படுவனவற்றை ஆராய்ந்து அவற்றுள் விலக்கியவற்றை நீக்கி விதித்தவற்றைச் செய்யுமாறு அனைவருக்கும் போதிக்கும் உரிமையும் ஆற்றலும் உடையவரே ஆசாரியார், போதகர், குருக்கள் என்ற பெயர்களுக்குடையவராவார். இவ்வாறு திருவாவடுதுறை ஆதீன வெளியீடொன்று கூறுகிறது.

ஆசாரம் என்ற சொல்லிலிருந்தே ஆசாரியார் என்ற சொல் பிறந்தது. ஆசாரம் என்பது ஒழுக்கம். ஒழுக்கம் உடையவரே பிறரை ஒழுங்குபடுத்த முடியும். எனவே, ஒழுக்கம் உடையவராயும் வேதசிவாகமப் பயிற்சி மிக்கவராயும், தமிழ் வடமொழிக்கல்வி உடையவராயும் புராண இதிகாசங்களிலும் அறிவு பெற்றவராயும் இலக்கண இலக்கியங்களில் ஆற்றல் மிக்கவராயும், இன்சொல் தானதர்மம், நல்லறம் மதலிய நற்பண்புகள் மிக்கவராயும் வாழ்ந்து சைவ சமயத்தார் யாவரையும் அரவணைத்து வழிகாட்டி நெறிப்படுத்தி அவர்களது ஐயங்கள் களைந்து அறநெறியில் வழி நடத்துபவர்களாயும் ஆளுமை கொண்டவர்களாக இருக்கும் சிவாச்சாரியப் பெருந்தகைகள் எமது சமயத்தின் வேர்களாக அமைகின்றனர் என்பது மிகையாகாது.


**வில்ஸ் தொலைத்தொடர்பு நிலையம்**

109 ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு 11

T.P No- 074 616948, 074 610934
FAX No- 074 619737

உரிமை..R. நிமலன்

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



**த.சிவதர்சன்**
தரம்: 10
நெல்லியடி ம.ம.வி.
கரவெட்டி.

நாவலர் பெருமான் சைவநெறி தழைத்தோங்கவும் தமிழ் மொழி செழித்து வளரவும் பெரும் பணிகள் ஆற்றியவர் ஆவர். அவர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே கந்தப்பிள்ளை, சிவகாமியம்மையார் என்பவருக்கு மகனாக 1822ஆம் ஆண்டு பிறந்தார். இலங்கையும் இந்தியாவும் அந்நியர் ஆட்சியின் கீழ் அப்பொழுது இருந்தன. சைவமும் தமிழும் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்கிய காலப்பகுதியிலே தோன்றியவர்தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். அவருக்கு பெற்றோர் இட்ட பெயர் ஆறுமுகம். அவரின் கல்விப் புலமையையும் நாவன்மையையும், சைவத்தமிழ்ப் பணிகளையும் பாராட்டித் திருவாவடுதுறை ஆதீனம் "நாவலர்" என்ற பட்டத்தை வழங்கியது. சைவம் காத்த நாவலர் பெருமானைச் சைவமக்கள் "ஐந்தாம் குரவர்" எனப் போற்றுகின்றனர்.

தமது இளமையிலேயே நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியார், இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்துப் புலவர் என்போரிடம் குருகுல முறைப்படி இலக்கிய இலக்கணங்களையும் சைவ சமய சாத்திரங்களையும் பயின்றார். வடமொழியையும் கற்றார். யாழ்ப்பாணம் வெஸ்லியன் மெதடிஸ்த மிஷன் மத்திய கல்லூரியில் ஆங்கிலக் கல்வியைக் கற்றார். அக் கல்லூரியில் சில காலம் ஆசிரியராகவும் விளங்கினார்.

நாவலர் பெருமான் தமிழையும் சைவத்தையும் இருகண்கள் எனக் கொண்டு வாழ்ந்தவர். பிரசங்க வன்மை, வாக்கச் சாமர்த்தியம், நல்லொழுக்கம், சிவபக்தி, சிவனடியார் பக்தி என்பன இளமைக் காலம் தொட்டு அவரிடம் காணப்பட்டன.

சைவ சமயத்தை அழியவிடாது பாதுகாக்க நாவலர் எடுத்த முயற்சிகள் பல. புறச்சமயம் புகாது, மக்களை சைவ சமயத்தில் நிலைத்து நிற்கச் செய்ய அரும்பாடுபட்டார். சைவ சமயத்தவர் ஒருசிலரிடம் காணப்பட்ட தவறான பழக்க வழக்கங்கள், செயல்கள் என்பவற்றை நீக்க முயன்றார் சைவப் பாடசாலைகளை நிறுவினார். அவர் நிறுவிய முதலாவது பாடசாலை வண்ணார் பண்ணைச் சைப்பிரகாச வித்தியாசாலையாகும்.

அது 1848ஆம் ஆண்டில் நிறுவப் பெற்றது. தமிழ்நாடு சிதம்பரத்திலும் சைவப் பிரகாச வித்தியாசாலை என்னும் பெயரில் பாடசாலை ஒன்றை நிறுவினார். அவ்வித்தியாசாலைகளில் போதிப்பதற்குச் சைவசமய நூல்களைப் பிரசுரித்தார். அதற்காகச் சென்னையிலும், யாழ்ப்பாணத்திலும் அச்சுக் கூடங்களை நிறுவினார். சைவ வினாவிடை, பால பாடம், பெரிய புராண வசனம், கந்த புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் முதலிய பல நூல்களை எழுதி அச்சிட்டு வெளியிட்டார்.

ஏடுகளில் எழுதப்பட்டிருந்த பல பழந்தமிழ் நூல்களைப் பரிசோதித்து அச்சில் பதிப்பித்தவரும், அத்துறையில் ஏனையோருக்கு வழகாட்டியாக விளங்கியவரும் நாவலர் பெருமானே ஆவர்.

சைவத் தமிழ்ப் பணிகளை இடையூறுன்றிச் செய்வதற்குத் தமக்கு கிடைத்த உத்தியோகத்தையும் தியாகஞ் செய்தவர் நாவலர் பெருமான். தமது வாழ்நாள் முழுவதும் பிரமச்சாரியாகவே வாழ்ந்தவர்.

சிவாலங்களிலும் மடாலயங்களிலும் சைவசமய உண்மைகளை எடுத்துக் கூறிப் பிரசங்கம் செய்தல் என்பவற்றினால் சைவப் பிரசாரம் செய்தார் நாவலர். அத்துடன் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டார். சைவத்தின் உண்மையை விளக்கினார். சைமக்களிடையேபுகுந்துள்ள மாசுகளை நீக்கிப் புறச் சமயத்தவரின் தீவிர பிரசாரத்தை தடுக்க முற்பட்டார்.

நாவலர் வெள்ளிக்கிழமைகள் தோறும் சைவப் பிரசங்கம் செய்து வந்தார். அதனால் சைவமக்கள் மதம் மாறாது தடுக்கப்பட்டனர். அந்நியர் ஆதிக்கத்தினாலும் மங்கி வந்த சைவம் மீண்டும் தழைத்தோங்கியது. சைவ மக்கள் திருநீறு முதலிய சிவ சின்னங்களை அணியவும் தேவாரம், திருவாசகம், முதலிய திரு முறைகளை ஓதவும் ஆலயங்களில் சைவாகமமுறைப்படி பூசை வழிபாடுகள் நடைபெறவும் வழிவகுத்தவர் நாவலர் பெருமானே ஆவர்.

திருக்கேதீஸ்வரம், கீரிமலைச் சிவன் கோயில் என்பவற்றின் தொன்மைச் சிறப்புக்களை மக்களுக்குளடுத்துக் கூறினார். அவற்றைப் புனரமைத்து நித்திய, நைமித்திய பூசைகளுக்கு வழிவகுக்குமாறு சைவமக்களுக்கு விஞ்ஞாபனம் விடுத்தார். அதனால் ஆலயங்கள் மீண்டும் அமைக்கப்பட்டன.

நாவலர் பெருமான் 1879ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் மக நட்சத்திரத்தில் இறைபாதம் அடைந்தார். நாவலரின் தமிழ்ப்பணி, கல்விப்பணி,, சமூகப்பணி யாவும் சைவசமயவிருத்தியை அடித்தளமாகக் கொண்டிருந்தன. அவர் வழியில் நாமும் சைவசமயப் பற்றுடையோராய், சைவநெறி நின்று ஒழுகுபவர்களாய் விளங்க வேண்டியது நம் கடமையாகும். இந்து மதத்தின் காவலனே ஆறுமுகநாவலர்.

# குருவே சிவம்



**கௌ.சுப்ரபாதசர்மா**
9B
*யா/நெல்லியடி ம.ம.வி*
*கரவெட்டி*

"மாதா பிதா குரு தெய்வம்" இதில் குருவுக்கு அடுத்த நிலையினையே கடவுளுக்குக் கொடுத்துள்ளனர் எமது மூதாதையர். ஆம்! அவ்வளவு பெறுமதி வாய்ந்தவர் எமக்குக் கல்வியையும் வாழ்க்கையையும் வாழ்க்கையின் முன்னேற்ற வழிகளையும் கற்றுத்தரும் குரு "குருவுந் தாரமும் தலைவிதிப்படி" என்று கூறுவது மிகவும் பொருத்தமானது. ஏனெனில் ஒருவனுக்கு இந்த இரண்டும் நல்ல முறையில் அமைந்தால் தான் அவன் எதிர்கால வாழ்வில் இன்பமும் நிம்மதியும் காண முடியும் முன்பெல்லாம் மாணவர்கள் குருவிடம் சென்று குருவிற்கு பணிவிடை செய்து அவர் வாழும் இல்லத்திலே தங்கியிருந்து கல்வி கற்றுப்பின் வெளியேறுவது முறையாக இருந்தது இது குருகுல வாசம் எனப்படும். ஆனால் இப்போது குருவிற்கும் மாணவருக்கும் பொதுவான இடம் ஆகிய பாடசாலையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நடை பெறுகின்றன. முன்பு கல்வியானது வெறுமனே புத்தகப்படிப்பு மாத்திரமின்றி வில்வித்தை, குத்துச்சண்டை, வாள்ச்சண்டை போன்ற புறத்திருத்தியங்களும் கொண்டதாகக் காணப்பட்டது. இதனை மாணவர்களும் முறையாகக் கற்று பெரும் போர்களில் தனித்து நின்று வெற்றயீட்டியதை பழங்கால புராணக்கதைகளும், இதிகாசங்களும் வரலாற்றுச் சான்றுகளும் எடுத்துக் காட்டுகின்றன

அன்றைய அரசகுமாரர்கள் குருகுல வாசமான கல்வி கற்கும் காலம் முடிந்தவுடன் தமக்குக் கற்பித்த குருவிற்கு நன்றி செலுத்தும் முகமாக குருதட்சனை என குருவிற்கு காணிக்கை வழங்கினர். இச்செயற்பாடானது அன்று எல்லோரிலும் குருவிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றது. ஒருவன் தனது உலகியல் வாழ்வில் இன்பம் காண கடவுள் வழிபாடும் குருவழிபாடுமே வழிசமைக்கின்றது.

கடவுள் ஒருவனைப் படைக்கின்றார். அவனை அவனது தாய் சீராட்டி வளர்க்கின்றார். அவனது தேவைகளை அவனது தந்தை பூர்த்தி செய்கின்றார். ஆனால் அவன் சமூகத்தால் மதிக்கப்படும் ஒரு நற் பிரசையாக வாழ அவனுக்கு கற்பிக்க குருவே வழி சமைக்கின்றார். கடவுள் ஆனவர் எம்மீது அன்பையும் கருணையும் காட்டுகின்றார். அதேயளவு அன்பையும் கருணையையும் ஒரு குரு எமக்குக் காட்டுகின்றார். இதிலிருந்தே எமக்குக் கடவுளும் குருவும் ஒன்று என்று தெரிகின்றதல்லவா கடவுள் எம்மிலுள்ள தீயவற்றை விலக்கி நல்வாழ்வு தருகின்றார். குருவும் எம்மனத்தில் பதிந்துள்ள தீயவற்றை விலக்கி எமது சந்தேகங்களைப் போக்கி எமக்கு உற்சாகம் அளித்து நற்போதனைகள் செய்து எமது திறமைகளை சமூகத்திற்கு எடுத்துக்காட்டி அவற்றை விருத்தி செய்யத் தூண்டி எமக்கு நல்வாழ்வு தருகின்றார். தனது அனுபவங்களை எமக்குக் கூறி நாம் எதிர் காலத்தில் நல்தொரு பதவியை கொண்டுயர வைக்கின்றார்.

இவ்வுலகிற்கு எல்லாத்தரமான தேவைகளும் அவற்றை செய்பவர்களும் இன்றியமையாதது உதாரணமாக மருத்துவர், கட்டடவியலாளர், பொறியியலாளர், வழக்கறிஞர், தொழில்நுட்பவியலாளர் போன்றவர்கள் இல்லாவிடின் எம் வாழ்வு இருள் சூழ்ந்ததாகக் காணப்படும். ஆனால் இவ்வாறான தொழிலை ஒருவன் பெற ஆசிரியரே உதவுகின்றார். எனவே மாணவர்களாகிய நாம் "குருவே சிவம்" என்னும் மொழியைக் கருத்தில் வைத்து ஆசிரியருக்கு மதிப்பளித்து உலகியல் வாழ்வில் வெற்றியைக் காண்போமாக.


ஹரி எம்போரியம்


இல .20,
புனித அந்தோனியார் மாவத்தை
கொழும்பு 13
T.P 074.612571

பாக்கிய மலர் பாதணி
விற்பனை நிலையம்

இல .139,
பஸார் வீதி
வவுனியா
T.P 024 22409

உரிமையாளர்:ந.செல்லத்துரை

# விரதங்களின் சிறப்பு



**க.மகிந்தன்**
தரம்: 8
யா/நெல்லியடி ம.ம.வி.
கரவெட்டி.

மனிதர்கள் தம் வாழ்வைச் சீராக நெறிப்படுத்தி, ஆன்மீகத் துறையில் முன்னேற உதவும் சாதனங்களில் விரதமும் ஒன்றாகும். விரதம் என்ற சொல் உணவைச் சுருக்குதல் அல்லது உணவை விடுத்தல் என பொருள் தருகிறது. உபவாசம், நோன்பு என்பனவும் விரதத்துடன் தொடர்புடைய சொற்கள் ஆகும். உபவாசம் என்பது உணவுவகைகளை ஒரு தினமோ அல்லது பல தினங்களோ விடுத்து மனதை இறைவனிடத்தில் லயிக்கும் செயலாகும். நாம் விரதங்களை அநுட்டிக்கும் போது மிக முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளான பொறுமை, இறைதியானம், மனமகிழ்ச்சி என்பவற்றை நம்மிடையே அமர்த்திக் கொள்ளல் வேண்டும்.

இவ் விரதமானது பல்வேறு சமயத்தவர்களிடமும் எம்மாலேதான் பரப்பப்பட்டது இருப்பினும் இந்து சமயத்தை பின்பற்றுபவர்களிடம் இதற்குச் சிறப்பான முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. "விரதமானது மனம் பொறி வழிப்போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம்,என்னும்மூன்றினாலும் இறைவனைமெய்யன்போடு வழிபடுதல்'' என ஆறுமுகநாவலர் விரதத்திற்கு வரையறை தந்துள்ளார்.விரதங்களில் பலவகை உண்டு. சிவவிரதம், சக்தி விரதம், விநாயகர் விரதம், சுப்பிரமணிய விரதம் முதலான விரதங்கள் மக்களிடையே சிறப்புப் பெற்றவைகளாகும். விரதமானது சிறப்பாக ஒரு தெய்வத்தை நோக்கி நோற்கப்படினும் சில கூட்டு விரதங்களும் உள்ளன.இவ் விரதங்கள் தவிர சில விரதங்கள் வாழ்க்கைக் கடமை என்ற அடிப்படையிலும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆடி அமாவாசை, மஹாளய அமாவாசை, சித்திரைப் பூரணை,மாதப் பூரணைகள் என்பன இவற்றிற்கு உதாரணங்கள் ஆகும். இவை தவிர பல்வேறு மாவட்டங்கள், ஊர்கள் என்ற அடிப்படையிலும் விரதங்கள் மேற் கொள்ளப்படுகின்றன. தாம் வாழும் பிரதேசங்களில் உள்ள ஆலயங்களில் திருவிழாக்கள், கும்பாபிஷேகம், சங்காபிஷேகம் சிறப்புப் பூசைகள் என்பன நடைபெறும் போது அப் பிரதேச மக்கள் நோன்புகளை மேற் கொள்வர்.

விரதங்கள் மனித வாழ்க்கையைச் செம்மையுறச் செய்கின்றன. அவை மனிதர்களை தீய வழியில் இருந்து விலகி நல்ல நிலைக்கு வர இறைவன் கொடுத்த பெறுமதி மிக்க கருவிகளாகும். இவ்விரதமானது எமக்கு பொறுமை மனவடக்கம், இறை சிந்தை போன்ற பல நல்ல பழக்க வழக்கங்களை அளிக்கின்றன. விரதங்களை மரபு முறைகளுக்கு ஏற்ப அநுட்டித்தல் நல்ல பயன்களைஎமக்குத் தரும்.நாம் இன்றையயுகத்திலே பல வேறுமரபு முறைகளைஅனுட்டிக்கத் தவறிவிடுகிறோம். இவையே இவ்விரதங்களின் முக்கிய அம்சமாகவும் இருப்பதுண்டு. ஆகவே நாம் சரியான முறையில் விரதங்களை அநுட்டித்து தெய்வ அனுக்கிரகத்தைப் பெறுவோமாக. மனிதனின் துன்ப துயரங்களை தெரிந்து கொள்வதற்கே இந்துமதம் மனித வாழ்வில் விரதங்களை செம்மையுறச் செய்துள்ளது.


## இதோ ''சைவன்'' வழங்கும் பிறந்த நாள் பரிசு

வாசகர்களே!

உங்கள் தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள், நண்பர்கள், உற்றார் உறவினர்களின் பிறந்தநாள் தினத்தை நாம் தரும் இக் கூப்பனில் எழுதி அனப்பினீாகளேயானால் அவர்களுடைய பெயருக்கு அர்ச்சனை நிகழ்த்திப் பழரசாதம் அனுப்பி வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். 16 நாட்களுக்கு முன்பு அனுப்பி வையுங்கள்.

பெயர்.......................................................................................................................

பிறந்த ஆண்டு, மாதம், திகதி................................. நட்சத்திரம்.......................

முகவரி.....................................................................................................................

...............................................................................................

அனுப்ப வேண்டிய முகவரி
பிறந்த நாள் பரிசு
''சைவன்''
கரணவாய் மத்தி,
கரணவாய்

# உலகிற்கே பண்பாட்டை சொல்லிக் கொடுப்பவர்கள் இந்துக்களே!

*திருமதி ஸ்ரீ-நந்தினி*
*அகில இலங்கை சைவன் நற்பணி மன்ற வெளிநாட்டுச் செயலாளர்*

உலகின் மூத்த மதம் இந்து மதம். உலகிற்கு கலை கலாச்சாரம், பண்பாடு,விழுமியம்,மனிதம் அனைத்தையும் சொல்லிக்கொடுப்பதும் இந்து மதமே! வாழ்க்கையை இனிமையுடன் அனுபவிக்கச் சொல்லுவதும் எமது இந்துமதமே ஆனால் எம்மதமும் சமம்தம் என்று எண்ணினால் அது கீழ்தரமான செயலாகும். பஞ்சமா பாதகங்களை செய்யாதே என்பதும் எமது மதம்தான். பாதகங்களைச் செய்துவிட்டு பாவமன்னிப்புக் கேட்பது ஆறறிவு படைத்த மனிதனின் செயலா?

மன்னிப்பு என்பது தவறு செய்பவனுக்கு கொடுக்கப்படும் ஒரு சந்தர்ப்பமே ஒழிய மீண்டும் மீண்டும் தவறு செய்பவனுக்கல்ல. எமது மதத்தில் தப்புச் செய்தால் நிச்சயம் தண்டனை உண்டென்று கூறப்பட்டுள்ளது. வேறு மதத்தில் அப்படியல்ல எப்படியும் வாழலாம்,எத்தனை கொலையும் செய்யலாம் , எத்தனை திருமணமும் செய்யலாம் எப்படியான கீழ்நிலையான வாழ்க்கையும் வாழலாம் என்றுதான் மற்றைய மதங்கள் கூறித்திரிகின்றன உதாரணத்திற்கு உழைத்து வாழமுடியாதவர்களிற்கும்,சமூகத்தில் கீழ்த்தரமாக வாழ்பவர்களுக்குமே மதமாற்றம் செய்யும் மதங்கள் அடைக்கலம் கொடுக்கிறது.

இந்துக்களே சற்று யோசியுங்கள் தற்போது மேலைத் தேயத்தவர்கள் நம்முடைய பண்பாட்டை பின்பற்றுகிறார்கள். ஆனால் நாம்? கீழ்த்தரமான நிலையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றோம். பணம் மட்டுந்தான் வாழ்க்கையா? பணம் உள்ள உங்க பண்பாடடை எடுத்துக் காட்டமுடியாதா? இந்துக்கள் நாம் என்றும் உயாந்தவர்கள் பணத்திற்காகவும் சொகுசு வாழ்க்கைக்காகவும் உங்கள் தாய் தந்தையை விலை பேசாதீர்கள்.

இந்துக்களாகிய எமக்கு அறிவுரைகூறும் அளவிற்கு மற்றைய மதத்தினருக்கு அருகதையுண்டா? சுவாமி விகோனந்தர் சொன்னது போல உணர்ந்து: உணர்த்தி வாழ்பவர்கள் நாம் எமக்குப் புத்திமதி கூறுவதற்காக ஆவியை வழிபடுபவர்கள் அலைகிறார்கள் மாட்டைக் கொன்று தின்னும் மதிகெட்டவர்களை நம் வீட்டிற்குள் எடுப்பது நியாயமா? இந்து தர்மமா? பசுவை நாம் தெய்வமாக வணங்குகின்றோம். வேற்று மதத்தினர் மாற்று மதத்தினர் பசுவை வதை செய்து சதையை உண்கிறார்கள் இவர்கள் பண்பானவர்களா? எமது சமூகம் இவர்களிற்கு இருக்க இருக்கை கொடுப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதா? உலகிற்கே பண்பாட்டை சொல்லிக் கொடுக்கும் நாம் பண்பற்ற இவர்கள் பின்னால் சொகுசு வாழ்விற்காகவும் ஐரோப்பிய நாடுகளில் குடியேறுவதற்காகவும் திரிவது உங்கள் தாயை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதற்கு சமமாகும் நாம் வாழ்வது கொஞ்சக் காலமே இக்கால இடைவெளிக்குள் சிரித்து துன்பம் மறந்து உழைத்து இன்பம் கலந்து வாழ்வோம்.


**மலர்ஸ் பாதணி அகம்**

**உள்நாட்டு வெளிநாட்டு பாதணிகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம்**

பிரதான வீதி, நெல்லியடி.

**உரிமையாளர்: மா.கதிரமலை**

**கதிரவன்ஸ் பாதணி அகம்**

**உள்நாட்டு வெளிநாட்டு பாதணிகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம்**

பிரதான வீதி, நெல்லியடி.

# இந்து புரட்சிப் பாடல்

இந்து சமய மக்கள் எல்லாம் ஒன்று சேருவோம்
பந்தத்தோடு இணக்கமாக வாழ்ந்து காட்டுவோம்
எந்த மதமும் இதற்கு ஈடு இல்லை என்னுவோம்
முந்து புகழ் இந்து தர்மம் முழுங்கச் செய்வோம்


ஆதி ஆதி காலம் தொட்டு வந்த மதம் இது
ஆதி மூல நாயகனை கண்ட மதம் இது
ஓதி ஓதி உண்மைதனை உரைத்த மதம் இது
நீதி தேவன் கோயில் கொண்டு தளைத்த மதம் இது

பெற்ற தாயை பிறந்த மக்கள் வெறுப்பதும் உண்டோ
உற்ற தந்தை இல்லை என்று உரைப்பவர் உண்டோ
முற்றும் உணர்ந்த இந்து தர்மம் முறை அறியாமல்
தொற்று கூறும் தீயர் மனம் திருந்த செய்வோம்

அன்பு வழி காட்டுவதும் இந்து தர்மமே
இன்பநிலை கூட்டுவதும் இந்து தர்மமே
முன்பு உலகை உயர்த்தியதும் இந்து தர்மமே
துன்பங்களை போக்கியதும் இந்து தர்மமே

உனது நாடு உனது வேதம் உரிமை காக்க வா
உனது மானம் உனது தர்மம் உரிமை காக்கவா
இனிய சமயம் சைவசமயம் என்று சொல்லவா
புனித மதம் இந்து மதம் என்று புகழுவா.

# சிவராத்திரியின் மகிமை



ப. சாதனா
தரம்: 7
யா/நெல்லியடி ம.ம.வி.
கரவெட்டி

உலகிற்கு கருத்தா இறைவன். ஒவ்வொரு இறைவனுக்கும் ஒவ்வொரு விரதங்கள் உண்டு. இவ் விரதங்கள் ஆன்ம ஈடேற்றங் கருதி செய்யும் சாதனை ஆகும். இப்பொழுது சிவவிரதங்களை நோக்குவோம். சிவனுக்கு சிவராத்திரி விரதம், பிரதோஷ விரதம், சோம வார விரதம், ,திருவாதிரை விரதம் உமா மகேசுவர விரதம், கேதார கௌரி விரதம், கல்யாண சுந்தர விரதம், சூல விரதம், இடப விரதம் என சிவ விரதங்கள் எட்டாகும். இங்கு சிவராத்திரி விரதத்தினைப் பற்றி நோக்குவோம்.

இராத்திரி என்பது இருட்காலமாகும் என்பது யாவரும் அறிந்தது என்னும் உண்மையான இருட்காலம் என்பது இறைவன் உலகம் முழுவதையும் ஒடுக்கி நிற்கும் காலம். இதனை "சர்வ சங்கார காலம்" "பிரளய காலம்" "ஊழி முடிவு" என்று பலவாறாகக் கூறுவர் இரவில் ஒளியின்றி உயிர்களின் நடமாட்டம் இல்லாது எங்கும் அமைதி நிலவுவது போல் இந்த ஊழி ஒடுக்கங் காலத்தில் பஞ்ச பூதங்களும் தனு, கரண,புவன போகங்களும் ஒன்றுமேயில்லாது உயிர்கள் செயற்றுக் கிடப்பனவாகும். ஆகவே அப் பொழுது அமைதி நிலவும் இந்தப் பேரிருளில் தனித்து நிற்பவன் சிவபெருமான் ஒருவனேயாகும்.நாம் நாள் தோறும் காண்கின்ற இரவு அனைத்துயிர்க்கும் உயிருக்கும் உரிய சாதாரண இராக்காலமாகும். இதனால்தான் இவ்விரவு "சிவராத்திரி" எனப் பெயர் பெற்றுள்ளது. ஊழி முடிவில் ஒடுங்கிய உலகத்தை மீள் தோற்றுவித்ததற்காக அறைவன் சோதி வடிவான இலிங்கமாய் நின்று "இல்லிதாதேவி" எனும் பெயரோடு சக்தியைத் தோற்றுவிக்க அத்தேவி

இலிங்க பிரானை வணங்க அவர் இலிங்கோற்பவராகத் தோன்றி உலகின் மறு தோற்றத்தின் பொருட்டு பிரமா முதலியோரைப் படைத்துச் சிருட்டித் தொழிலை ஆரம்பிப்பார். இதனையே மாசி மாதத்துச் சதுர்த்தி திதியில் வரும் இரவும், அன்று இரவு மூன்றாம் சாமமும் நடைபெறும் இலிங்கோற்பவ பூசையும் எடுத்துக் காட்டுகின்றன. சிவனிடத்தில் அன்பு பூண்டொழுகுவோர்க்கு அன்றைய நாள் நோன்பு நாளாகும்.

சைவ சமயிகள் யாரொருவராலும் அனுட்டிக்கப்பட வேண்டியவிரதம் சிவராத்திரி விரதமாகும். மாசி மாதத்துத் தேய் பிறைச் சதுர்த்த சித்திரையில் சிவபெருமானைக் குறித்து அனுட்டிப்பது சிவராத்திரி விரதம். இந்நாளில் உபவாசம் இருப்பதோடு இரவு முழுவதையும் நித்திரையின்றிச் சிவவழிபாட்டிலும் செலவு செய்தல் வேண்டும். இரவில் நான்கு சாமப் பூசைகளும் அவ்வவ் காலங்களில் செய்தல் உத்தமம். இன்றேல் ஒரு காலத்தில் சேர்ந்தேனும் செய்தல் வேண்டும். இது மத்திமம் ஆகும். நான்கு சாமத்திலும் தேனாலும் பெருமானுக்கு அபிடேகம் செய்யக் கடவர். நான்கு சாமப் பூசைகளிலும் வில்வத்தால் அர்ச்சிப்பது மேலான பலனைக் கொடுக்கும் இக் காலங்களில் விநாயகர்க்கும் சண்டேஸ்வரர்க்கும் பூசை செய்தல் வேண்டும். சிவ பூசை இல்லாதோர் நான்கு சாமமும் சிவாலய தரிசனம் செய்வதோடு பஞ்சாட்சர செபம் சிவபுராணம் படித்தல் கேட்டல் முதலியவற்றில் இரவைக் கழிக்க வேண்டும். உபவாசம் இருக்க இயலாதோர் நீரேனும், பாலேனும் உண்டு கொள்ளலாம். இரவு முழுவதும் இந்நாளில் நித்திரை விழிக்க முடியாதவர்கள் 14வது நாழிகையில் வரும் இலிங்கோவற்சவ காலம் வரையிலாயினும் நித்திரை ஒழித்தல் வேண்டும். இவ்லிங்கோற்சவ காலத்தில் செய்யும் தரிசனமும் பூசையும் பெரும்பலன் நிறைந்தன. இறைவனின் திருவுளம் பற்றிய காலம் இதுவாகும்.

உபவாசம் மேற்கொண்டால் அடுத்த நாட்காலையிலே நித்திய கருமங்கள் முடித்துக் கொண்டு சூரியோத ஆறு நாழிகைக்குள்ளே சிவனடியாரோடு பாரணம் பண்ணல் வேண்டும். பாரணம் பண்ணிய பின் பகலிலே நித்திரை செய்யலாகாது. சிவராத்திரி விரத பலன் பாவ நீக்கமும் உலகம் எல்லா நலன்களும் பெற்றுச் சிறப்படைவோமாக.

# அறநெறிக் கீதம்

(எடுப்பு)
தொன்னெறி அறங்கள் துளங்கிடும் ஞான
உண்மைகள் அனைத்தும் உணர்வோமே!
(தொடுப்பு)
அன்புடன் அருளும் அமைந்தநல் வாழ்வை
அறநெறி வழியில் அமைப்போமே
(முடிப்பு)
தூய்மையும் தியானமும் சொல்லிய ஞானியர்
வாய்மையின் வழிகளை வளர்ப்போம்
ஆயநாற் பாதமும் ஆகம வேதமும்
ஆன்மநன் னேயமும் அறிவோமே!





ஆலயம் போற்றி நல் நோன்புகள் நோற்கவும்
அடியராய்ப் பணிசெய்ய அறிவோமே!
சாலவும் இறைநாமம் கூடியே பாடவும்
சாத்திர ஆற்றலும் பெறுவோமே!

நாளை உலகினில் நல்லவர் என்றிடும்
நாமம் பெற்றிடப் ப'பில்வோமே!
தீதும் நன்றும் யாதெனத் தேரும்
திறமைகள் அனைத்தும் பெறுவோமே!

ஒன்றே குலமென ஒருவனே இறையென
உலகுக் குரைத்திட எழுவோமே!
நன்றே நினைத்திட நன்றே புரிந்திட
நல்லவை கற்றுத் தெளிவோமே!

அறநெறி - இறைபணி - ஆவதே - எம்பணி
அனைவரும் உணர்ந்திடும் வகையினில் உழைத்திட
அத்தன் திருவடி நித்தம் பணிந்துமே நாம்
(தொன்னெறி)

***திரு.இராசையா நாகேந்திரராஜா***
(வடமராட்சி அறநெறிப் பாடசாலை அமைப்பாளர்)

# இந்து எழுச்சிப்பாடல்

இந்து சமய வீரனே அணி திரண்டிடு
முன்னேறிடு முன்னேறிடு முன் அணியில் முந்திடு
வீரனே.......... வீரனே.........
இந்து மக்கள் உலகெலாம் கண் திறந்திட
பூவுலகில் தலை சிறந்த சமயம் ஆகிட
நாடிவா........ தேடிவா..........
நாடி தேடி ஆடிப்பாடி தியாகம் செய்யவா
(முன்னேறிடு)
வீரர் தியாக வாழ்வையெல்லாம் நாம் அறிந்திட
தீரர் அந்த முந்தையரின் வழி நடந்திட
சென்றிடு....... ஒன்றிரு.........
சென்று ஒன்றி மக்களுக்குணர்ச்சி தந்திடு
(முன்னேறிடு)
அன்னியரை நம்பி வாழும் இழிவை நீக்கிட
அச்சமின்றி சுயபலத்தில் ஊன்றி நின்றிட
வந்திடு........ இணைந்திடு.....
வந்திணைந்து கர்மவீர தொண்டனாகிடு
(முன்னேறிடு)

பாதையிலே பாசம் வந்து வழி மறித்திடும்
நடுவழியில் மோகம் வந்து திசை திருப்பிடும்
விழித்திரு....... நினைத்திரு.........
விழித்திரு நினைத்திரு நம் லட்சியத்தினை
(முன்னேறிடு)

# குங்குமம்

திருமதி.ந.ரவீதரா          செல்வி மு.புஸ்பரேகா
அறநெறி ஆசிரியைகள்
சாமணந்தறை, அல்வாய்

திருமணமாகிய பெண்கள் கட்டாயமாக நெற்றியின்நடுப்பகுதியில் குங்குமம் வைத்தே ஆகவேண்டும். திருமணம் முடித்த பெண்கள் ஒட்டுப்பொட்டு வைக்காதீர்கள். அந்தச் செயல் விட்டவாழ்விற்கு (வாழாவெட்டி) சமனான செயலாகும். எனவே திருமணம் முடித்த பெண்கள் ஒட்டுப் பொட்டு வைக்காதீர்கள். குங்குமம் என்கிற செந்நிறத்தூள் மஞ்சளை மூலதனமாகக் கொண்டு தயாரிக்கப்படுவது. இந்நிறம் மகாலக்ஷ்மியை நினைவூட்டுகிறது.

ஆணுக்கோ பெண்ணுக்கோ நெற்றியின் நடுப்பகுதியில் சக்கரம் ஒன்று சுழன்று கொண்டிருக்கின்றது. அந்தச் சக்கரத்தின் தன்மை கோபக்கனலை வீசுவதேயாகும். அந்தக்கோபக்கனலை அடக்கக் கூடிய தன்மை குங்குமத்திற்கே உண்டு. ஆதலால் ஆணோ, பெண்ணோ, வாழ்விழந்தவர்களோ, சிறுவர் சிறிமியரோ, எல்லோரும் கிடைக்கையாக குங்குமத்தைப் பூசலாம். திருமணம் முடித்த பெண்கள் மட்டுமே நெற்றியிலும் நெற்றிவகிட்டிலும், வட்டமாகக் குங்குமம் வைக்க வேண்டும். பெண்களின் உடலில் ஐந்து இடங்களில் தனலக்ஷ்மி வாசம் செய்கிறார். அவர் முதலாவதாக வந்து குடியேறும் இடமே நெற்றி வகிடு கணவனுக்காக நெற்றியிலும், கடவுளுக்காக நெற்றி வகிட்டிலும் திருமணம் முடித்த பெண்கள் குங்குமப்பொட்டு வைக்க வேண்டும். ஆண்கள் குங்குமம் வைக்கக்கூடாது என்று கூறுகிறவர்கள் புத்திபேதளைத்தவர்களே, அவர்கள் நமது பண்பாட்டு பகைவர்களும் கூட என்பதை நாம் உணர வேண்டும். நெற்றியில் வபூதியும் சந்தணமும் அணிவதால் இறைவனிடத்தில் பக்தி உண்டாகும். அன்றாட வாழ்வில் நல்லன நடக்கும். நீண்ட ஆயுள் கடைக்கும் நிறைவாக நீறில்லா நெற்றிபாழ். கோயில் இல்லா ஊர் அடவிக்காடே என்பதை உணர்த்தும். நாம் இந்துக்கள் இந்து தர்மப்படி உரிய புண்டரதாரணம் செய்து கொள்ளக் கூச்சப்படாமல், துணிச்சலான தனமான இந்துக்களாக வாழ்வோம்.

# இந்து மதம் என்றால்?.....

**கி.சீதா**
ஆண்டு 9
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

1.இந்து மதம் மட்டுமே அன்பைப்போதிக்கிறது.
2.சிவன் உண்மையானவன் என்பவன் உயர்ந்து வாழ்வன்
3.நீ உயர்வதற்கு உன்னையே நீ நம்பி வாழ்.
4.இன்பமும் துன்பமும் மனிதனுக்கு மட்டுமே.
5.கீழ்தரமானோர்க்கு நரகலோமும் பண்பானவனுக்கு சொர்க்கலோகமும் கிட்டும்
6.அறிவுள்ளவனே பண்பாளன் ஆவான்.
7.கடமையே இந்துவின் வாழ்வு
8.நீ இறந்தும் வாழ விரும்பின் நன்மையே செய்
9.சிவனுடன் சேர்ந்து முயற்சியில் ஈடுபடு வெற்றி நிச்சயம்.
10.சிவனின் சிந்தனையில் இருப்பவன் சிறந்து வாழ்வான்.
11.மகிழ்வுடன் வாழ்ந்தால் மனிதனாய் வாழலாம்.
12.கருணையுள்ளவன் இல்லத்தில் கந்தன் குடிகொள்வான்.
13.நான் என்ற எண்ணம் உன்னை விட்டால் நீ உயர்வாய்.
14.புறம் பேசாதே மிகவும் கீழ்த்தரமான செயல்.
15.பிறர் மனம் புண்படவைப்பவன் கீழ்த்தரமானவனே!
16.பிறருக்கு கேடு நினைப்பது கீழ்தரமான செயல்.
17.தன்னம்பிக்கை இல்லாதவன் பிணத்திற்கு சமம்.
18.இலட்சியம் இல்லாதவன் இழிவானவன்.
19.பண்பு பாசம் பண்பாளனிடம் மட்டுமே இருக்கும்.
20நேர்மையானவன் மட்டுமே நேர்வழியில் வாழ்வான்.
21.இந்து மதம் மட்டுமே மனிதனை வாழ வழிகாட்டுகிறது.
22.இந்து மதம் மட்டுமே உயர்வானவனை உருவாக்கிறது.
23.இந்து மதம் மட்டுமே ஏழைகளிடம் இரங்கச் சொல்கிறது.
24.உண்மைக்காக நீ எதையும் துணிந்து செய்.
25கத்தியைவிடக் கூர்மையான அன்பால் யாரையும் அடக்கலாம்.
26.மரணம் நிச்சயம் வாழும் போது மனிதனாக மட்டுமே வாழ்க.
27.பாதம் உள்ளதால் பாவம் செய்ய நடவாதே..
28.இந்து மதம் மட்டுமே அடாவடித்தனம் அற்றது.
29.இந்து மதம் மட்டுமே உலகில் உயர்ந்தது.
30.இந்து மதம் மட்டுமே தளைத்தோங்கி வளர்கிறது.

# பசுவதை இந்துக்களுக்கு நியாயமா?

யோ.கஜேந்திரன்
தரம் 13
யா/தேவரையாளி இந்துக் கல்லூரி

இந்துக்களாகிய நாம் பசுவை தெய்வமாக வணங்கி வாழ்கிறோம். எமது ஆலயங்களில் நந்திக்கு முதல் இடம் கொடுக்கிறோம். இந்துக்களின் தேசியக் கொடியில் கூட நந்தியை புகுத்தியுள்ளோம். நாம் தினமும் அணியும் விபூதியைக் கூட பசுவின் சாணத்தினால் உருவாக்குகிறோம். இப்படியாக எமது வாழ்வுடன் ஒன்றிப்போயுள்ள பசுவை வதை செய்து சதையை உண்பது இந்து தர்மமா?

எம்மை ஈன்றெடுத்த தாய் தனது இரத்தத்தை பாலாக எமக்கு ஊட்டி வளர்கிறார். நாம் சுமார் மூன்று வயதிலிருந்து நாம் இறக்கும் வரை குடிக்கப்போவது பசுப்பாலையேயாகும் (அங்கர்,நெஸ்ரமோல்ட், வீவா, கோர்லிக்ஸ்,நெஸ்பிறே,லக்ஸ்பிறே,லக்ரோஜன்) மூன்று வயது வரை தாய்ப்பால் அருந்தி விட்டு வயது வந்ததும் எமது தாயை தூஷிக்க முடியுமா? தாயை வெட்டி உண்போமா? ஆனால் எம்மில் சிலர் அப்படியான இழிவான செயலையே செய்கிறார்கள். காலையில் பசுப்பாலை சுவைத்து அருந்தி விட்டு அதேமாட்டை வெட்டி சதையை சுவைத்து உண்கிறார்கள். மாட்டின் சதையை உண்பது தாயின் சதையை வெட்டி உண்பதற்கு நிகரான செயலாகும். இந்து தர்மமோ ஏற்றுக்கொள்ள முடியாத இந்தச் செயலை செய்யும் போது நீங்கள் வெட்கப்படுவதில்லையா?

இப் பகுதியை வாசிப்பவர்கள் இன்றிலிருந்து மாட்டிறைச்சி உண்பதை நிறுத்தி புனித இந்துக்களாக வாழப்பழகுங்கள். மனிதனாகவாழப் பழகுங்கள்! இல்லையேல்?!!...............



# வீபூதி

செல்வன்.நா.விநோத்
தரம் 8
யா./கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்

இந்துக்களில் இன்று சிலர் திருநீற்றின் மகிமை தெரியாமல் வாழ்ந்து வருகிறார்கள். சைவ சின்னங்களில் ஒன்றான வீபூதியை நாம் ஏன் நெற்றியிலும் உடலில் மற்றைய பாகங்களிலும் பூசுகிறோம் என்று தெரியுமா? இந்து சமயத்தவர்களாகிய நாம் மட்டுமே என்றோ ஒரு நாளைக்கு மரணித்து திருநீற்றைப் போல் நீறாகப் (சாம்பலாகப்) போகிறோம் என்பதை உணர்ந்து, மரணத்திற்கு முன்பு களவு, பொய் வஞ்சகம், சூது, ஏமாற்று, ஆணவம், பிறர்மனைவி நோக்கல், கொலை மதுஅடிமை, மச்சமாமிசம் உண்ணல், புறங்கூறல் தவிர்த்து நன்மை செய்யாவிடினும் தீமையாவது செய்யாமல் தூய்மையுடன் வாழ்ந்து மடிய வேண்டும் என்பதற்காகவே நாம் வீபூதி அணிகிறோம். இதில் முக்கியமாக எவர் எப்படி வாழ்ந்தாலும் நாம் மட்டும், இந்துக்களாகிய நாம் மட்டும் இப்படித்தான் வாழவேண்டும் என்று உணர்ந்து புனிதர்களாக சாவைத்தளுவ வேண்டும் என்று எண்ணியே வீபூதி அணிகின்றோம்.

இந்து சமயத்தைச் சார்ந்தவர்களே! நீங்கள் தினமும் நெற்றியில் திருநீறு அணிந்து உங்களை நீங்களே புனிதர்கள் ஆக்குங்கள். நான் ஒரு சிறியவன் நான் சமய அனுட்டானங்களுக்கு அடிபணிந்து வாழ்கிறேன். எனது பெற்றோர் எனக்குத்தினமும் சமய அனுட்டானங்களைப் பற்றி சொல்லித்தருகிறார்கள். அதே போல் பெற்றோர்களே! நீங்களும் உங்கள் பிள்ளைகளுக்கு சமய அனுட்டானங்களைச் சொல்லிக் கொடுங்கள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தவறாது கோயிலுக்கு பிள்ளைகளைக் கூட்டிச் செல்லுங்கள். பணம் செலவழித்து தூர இடங்களில் உள்ள கோயில்களுக்கு கூட்டிச் செல்லவேண்டிய அவசியமில்லை. உங்கள் ஊரிலுள்ளகோயிலுக்கு சென்று வந்தாலே போதும். உங்கள் பிள்ளைகள் உங்களை மதித்து நடக்க வேண்டுமென்று எண்ணினால் எமது சமயப்பண்பாட்டை மட்டுமே சொல்லிக் கொடுங்கள் இல்லையேல் பிள்ளைகள் உங்களை மிதித்தே வாழ்வார்கள் எமது ஆலயங்களை விளையாட்டு மைதானமாகவோ, களியாட்டக்கூடங்களாகவோ, வெளிநாட்டுக்கதை கதைக்கும் வியாபாரக் கூடமாகவோ, மாற்ற முயற்சிக்காதீர்கள்.

**உங்கள் முன் 16 கேள்விகள் உள்ளது விடைகளை 16 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும். அனுப்பவேண்டிய முகவரி :சைவன் கேள்விபதில்,** கரணவாய்மத்தி, கரணவா

1) எப்படியும் வாழலாம் என்பது என்ன வாழ்வு?
2) மனிதனை நல்வழிப்படுத்தும் மதம் எது?
3) சைவன் எதற்காக வெளிவருகிறான்?
4) இந்து மதத்தை விட்டு வேறொரு செல்நெறி நாடிச் செல்வது?
5) இந்து மதம் எதைப்பூர்த்தி செய்கிறது?
6) சூரியனுக்கும் எருதுகளுக்கும் நன்றி தெரிவிக்கும் விழா எது?
7) இராவணன் ஆண்ட நாடு எது?
8) அறியாமை இருளைப் போக்குவது எது?
9) அலை பாயும் மனதை ஒரு நிலைப்படுத்துவது எது?
10) திரு மந்திரத்தைத் தந்தவர் யார்?
11) துவைதம் என்றால் என்ன?
12) உபநிடதக் கருத்துக்களின் தொகுப்பு எத்தனை?
13) ஆதிசைவர் எனப்படுவோர் யார்?
14) இரண்டு கண்கள் எனப்படுவது யாது?
15) மனிதனை நற்பிரஜையாக உருவாக்குபவர் யார்?
16) எல்லா உயிர்களினதும் நன்மைக்காகவும் விழா கொண்டாடுவது யார்?

**கேள்விகளுக்குரிய பதில்கள் "சைவன்" வைத்திருக்கிறான்**

பரிசுகள்: வேஷ்டி சால்வை,பட்டுச்சேலை, மேற்சட்டைகள் மாணவர்களுக்கும் பரிசுண்டு, இந்துக்கள் அனைவருக்கும் பரிசுண்டு.பாராட்டுக்குள் 12 பேர் அடங்குவர்.மாணவர்கள் தாங்கள் படிக்கும் பாடசாலையின் பெயரையும்,படிக்கும் வகுப்பையும் குறிப்பிடவும்


**அப்கோ மருந்தகமும் பல சரக்கு வாணிபமும்**

10 பனானந்த மாவத்தை,
கொழும்பு 15

**விநாயகர் செப்புத்தளபாட வியாபார நிலையம்**

உரிமை..S.சதீஸ்குமார்
TP No- 071 355563
புதிய பேருந்து நிலைய மேல்மாடி,
வவுனியா.

# பாராட்டுச் செய்தி

திருமதி. வி.சுகுமாரன்
அதிபர்
யா/வடமராட்சி மத்திய மகளீர் கல்லூரி

இந்து மதத்திற்காக சஞ்சிகைகள் வெளிவருவதே மிகவும்குறைந்து செல்கிறது. இவ்வேளை "சைவன்" வெளிவருவது மனதிற்கு சற்று ஆறுதலைத் தருகிறது. சைவனுக்கு பாராட்டுத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது மதம் என்பது ஆதிகாலத்தில் தோன்றியது. ஆதிகாலத்தில் இந்து மதம் என்பது கிடையாது. இதை வைதீக மதம் என்று தான் சொன்னார்கள். பிற்காலத்தில் பல மதங்கள் தோன்றியதால் இந்த வைதீக மதத்தை இந்த மதம் என்று சொல்லி அடையாளம் காட்ட வேண்டி இருந்தது. ஒரு கிராமத்தில் ஒரே ஒரு தெரு இருக்கும் போது அந்தத்தெருவுக்கு பெயர் எதுவும் இருக்காது. அங்கே பல தெருக்கள் ஏற்பட்டது. அப்போது ஒவ்வொரு தெருவுக்கும் ஒவ்வொரு பெயர் ஏற்ப்படும்.

அதே போல் வேறு மதங்கள் இல்லாத போது இந்து மதம் வைதீகம் என்று பெயர் பெற்றது. இந்த வைதீகமதத்திற்கு வேதம்தான் ஆதாரம். வேதம் என்பது ஒருவரால் எழுதப்பட்தல்ல. வேதம் பகவானின் மூச்சுக்காற்றிலிருந்து எழுந்தது. அதை நான்காகப் பிரித்து வைத்து முனிவர்கள் அதை தம் சீடர்களுக்கு வாய்மொழியாக உபதேசம் செய்தனர். இது குரு, சீடர் என்ற வகையில் ஒருவர் மற்றொருவருக்கு உபதேசம் செய்து வழிவழியாக வந்தது. அதை எழுதிப்படிக்கவில்லை: பத்தகமாக வெளிவிடவில்லை. எல்லாமே வாய்மொழியாகச் சொல்லப்பட்டு சீடர்களால் கிரகிக்கப்பட்டு அனுஷ்டானத்தில் கொண்டு வரப்பட்டது. மற்ற மதங்களில் அவர்களின் தலைவர்கள் எழுதி வைத்ததைத் தங்களது நூலாகக் கொண்டார்கள். அது பலவிதமாக இருந்தது. இந்து மதத்தில்தான் முக்கியமாக அகிம்சை, தர்மம், வாய்மை, போன்றவை வலியுறுத்தப்பட்டுள்ளது. எல்லாத் தர்மங்களுக்கும் உயர்வானது அகிம்சைதான் என்று சொல்லப்பட்டது. அதற்கடுத்ததாக வாய்மை. என்னநேர்ந்தாலும் சொல்லிப் பிழைக்கக் கூடாது,(காட்டிக்கொடுப்பது) என்பது கடைப்பிடிக்கப்பட்டது.

அதேபோல் தர்மத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தர்மம் என்பதில் இரண்டு வகை உண்டு. ஒன்று பிறருக்கு உதவுவதை

தர்மம் என்றார்கள். மற்றொரு தர்மம் என்பது ஆசார அனுஷ்டானங்களை அனுசரித்து நடப்பதை தர்மமாக சொன்னார்கள். இதை குலதர்மம் என்று சொன்னார்கள். இந்த குலதர்மத்தைக் கடைப்பிடிப்பதில் சில வேறுபாடுகள் இருந்தாலும் ஆசார அனுஷ்டானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். இந்து மதத்தில் சொல்லப்படாத தர்மங்கள் வேறு எதிலும் இல்லை. யுதிஸ்டிரருக்குப் பிஸ்மர் பல தர்மங்களைச் சொன்னார். இதெல்லாம் மகாபாரத்தில் உள்ளது. இது தவிர விதுரநீதி என்னும் ஒன்று உள்ளது. இதுவும் தர்மத்தை அனுசரித்துச் சொல்லப்பட்டதுதான். அதேபோல் பரமேஸ்வரன் பார்வதிக்குப் பல தர்மங்களைச் சொன்னதாக உள்ளது. யட்சப்பிரச்னம் பிரச்சோத்திர ரத்தினாவளி என்று ஆதிசங்கரர் தம் சீடர்களுக்கு உபதேசம் செய்த நூல் ஒன்று உள்ளது. எல்லாமே இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டவைதான்

இவற்றையெல்லாம் நாம் தெரிந்து கொண்டால்தான் நம் வாழ்நாளில் என்னென்ன தவறுகள் செய்கிறோம் அதனால் என்னென்ன பாவங்கள் சம்பவிக்கும் என்பதைத் தெரிந்து கொண்டு நேர்மையான வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து நேர்மையாக வாழலாம்; பரலோக சுகத்திற்கும் அது உதவும். மொத்தத்தில் அதர்மத்தைக் கண்டு பயப்பிட வேண்டும், "வேதோ கில தர்ம மூலம்' என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் மனித வாழ்க்கையில் பலருக்கு வேதத்திலோ, தர்மத்திலோ சாஸ்திரங்களிலோ நம்பிக்கை இல்லாமல் போய் விடுகிறது. இதற்குக் காரணம் அவர்களின் புத்திதான் என்கிறார்கள். புத்தி, மனம், கர்மேந்திரியங்கள் இவைதான் பாவ புண்ணியங்களைச் செய்யும்படி தூண்டுகிறன.


இந்தப்புத்தி எப்படி வேலை செய்கிறதென்றால் அது அவனவன் விதியை அனுசரித்து வேலை செய்கிறது. "புத்தி கர்மானுசாரனே" என்றார்கள். சிலருக்கு தாம் செய்வது அதர்மம் என்று தெரிந்திருந்தும். அதர்மத்திலேயே அவர்களது புத்திசெல்கிறது. அதர்மவழியானாலும் ஆதாயம் இருந்தால் அந்த வழியில் செல்லத்தோன்றுகிறது. துரியோதனன் கூடஎமக்குத் தர்மம் எல்லாம் தெரியும். ஆனாலும் என்புத்தி அதில் ஈடுபடவில்லை. நான் செய்வது அதர்மமே இருந்தாலும் ஆதாயம்தான் முக்கியமாகப்படுகிறது என்றானாம். கடைசியில் அதர்மம் அவனைக் காப்பாற்றவில்லை **தர்மம் தான் பாண்டவர்களைக் காப்பாற்றியுள்ளது.தர்மம் சொல்லும் சைவன் வெற்றி பெற எனது பாராட்டுக்கள்**


# பச்சைத்தமிழ் நன்றிகள்

"சைவன்" உருவாக அரும்பாடு பட்ட பெரியோர்கள்,வளர்ச்சிக்காக உதவி நல்கிய அன்பர்கள். "சைவன்" செவ்வெனே வெளிவர ஆசியுரை,ஆசிச்செய்தி,வாழ்த்துரை,வாழ்த்துச் செய்தி,பாராட்டுச்செய்தி,தந்த மதிப்புக்குரியோர், ஆக்கங்கள் அளித்து சிறப்பித்த நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர், ஆசிரிய ஆசிரியைகள்,மாணவச்செல்வங்களுக்கும், மற்றும் மாணவச்செல்வங்களிற்கும், அறநெறிப் பாடசாலை,பாலர்பாடசாலை ஆசிரியைகளுக்கும், சான்றோர்களுக்கும்,என்னை ஊக்கப்படுத்தும் கண்கண்ட தெய்வங்களிற்கும்,என் ஆருயிர்த்தம்பி இராசையா நாகேஸ்வரனுக்கும்,என் அன்புக்குரிய நண்பர்களிற்கும்,அகில இலங்கை "சைவன்"நற்பணி மன்றத்தினருக்கும்,சந்நிதியான் ஆச்சிரமத்தினருக்கும்,விளம்பரமும் உதவியும் புரியும் வர்த்தகர்களிற்கும், உடல், பொருள், ஆவியின் மூலம் உதவி புரிந்தோர் "சைவனை" பலசிரமங்களிற்கு மத்தியில் குறுகிய நாட்களிற்குள் அழகாக பதித்துத்தந்த மாசிலா ஒவ்செற் பதிப்பகத்தினருக்கும்,வணக்கத்திற்குரிய சுவாமிஜி தந்திரதேவா மகாராஜ் அவர்களிற்கும் என்னை கருவியாக்கி இறைபணி செய்ய வைத்த சிவனே உன் கருணைமழை என்றென்றும் நிறைவதாக!


*சைவன்ஆசிரியர்*


















சமயப் பணிகளின் போது சமயத்தலைவர்களோடும்
சமயத்தொண்டர்களோடும் நூலாசிரியர்

மாசிலா அச்சகம்-நெல்லியடி